# *கருத்து வேறுபாடுகளை அடக்குதல்*
# *ஆண்டு அறிக்கை 2022*



*ஜனாதிபதி செயலகம் உட்பட கொழும்பில் உள்ள பல முக்கிய அரசாங்க்க் கட்டிடங்களுக்குள் 9 ஜூலை 2022 அன்று பிரவேசித்த போராட்டக்காரர்கள் ஜனாதிபதி பதவி விலகும் வரை அவற்றை ஆக்கிரமிக்கத் தொடங்கினர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச விரைவில் நாட்டை விட்டு வெளியேறினார். புகைப்பட உபயம்: Left Voice*


**INFORM** Human Rights Documentation Centre
www.inform.lk

*2022இல் இலங்கையில் கருத்து வேறுபாடுகளை அடக்குதல்: ஆண்டு அறிக்கை.*
*மே 2023இல் வெளியிடப்பட்டது.*
*© INFORM மனித உரிமைகள் ஆவண நிலையம்*
*கொழும்பு, இலங்கை*
*https://www.inform.lk/*

*இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையைக் கண்காணிக்கவும் அத்துடன் ஆவணப்படுத்தவும், குறிப்பாக இன மோதல் மற்றும் போரின் பின்னணியில், உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் எழுத்து மற்றும் வாய்வழி தலையீடுகள் மூலம் நிலைமையை அறிக்கையிடவும் 1990இல் INFORM நிறுவப்பட்டது. உரிமைகள் அடிக்கடியும் மற்றும் முறைமைரீதியாகவும் மீறப்படும் ஏனைய சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் INFORM கவனம் செலுத்தியது. தற்போது, தேர்தல் கண்காணிப்பு, கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஆகியன மீது INFORM கவனம் செலுத்துகிறது. இலங்கையின் கொழும்பில் INFORM தளத்தைக்கொண்டுள்ளதுடன், உள்ளூர் செயலார்வலர்களுடனும், குழுக்களுடனும் மற்றும் வலைப்பின்னலமைப்புக்களுடனும் மற்றும் பிராந்திய (ஆசிய) மற்றும் சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னலமைப்புக்களுடனும் நெருக்கமாகச் செயல்படுகிறது.*

## உள்ளடக்கம்


1. நிறைவேற்றுச் சாராம்சம்
2. கண்ணோட்டம்
3. விடயப் புதுப்பிப்புகள்
4. ஊடக அடக்குமுறை மற்றும் கருத்துச் சுதந்திரம்
5. ஒன்று கூடும் சுதந்திரத்தின் அடக்குமுறை
6. சட்ட மற்றும் கொள்கை மாற்றங்கள்
7. சிவில் சமூகத்தின் அடக்குமுறை
8. ஏனைய சம்பவங்கள்

## *1. நிறைவேற்றுச் சாராம்சம்*

***முறைமையியல்:*** *இந்த வருடாந்த அறிக்கை 2022இல் வெளியிடப்பட்ட கருத்து வேறுபாடு அறிக்கைகளின் மாதாந்த அடக்குமுறையை அடிப்படையாகக் கொண்டது. முக்கியமாக, பிரதான மற்றும் சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்படும் தகவல்களின் அடிப்படையில், இலங்கையில் கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவது தொடர்பான சில குறிப்பிடத்தக்க சம்பவங்களின் பொதுவான போக்குகளையும் மற்றும் விவரங்களையும் கருத்து வேறுபாடுகளை அடக்குதல் வழங்குகிறது. மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு [human rights defenders (HRDs)] எதிரான கைதுகள், அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் ஆகியவற்றையும் அத்துடன் எதிர்காலத்தில் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல், சேர்க்கை மற்றும் கருத்து வேறுபாடு ஆகியன மீது எதிர்மறையான தாக்கத்தை கொண்டுள்ள புதிய அடக்குமுறைச் சட்டங்கள், நியமனங்கள், கொள்கை முடிவுகள் போன்ற சாத்தியமான அச்சுறுத்தல்கள் ஆகியனவற்றையும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அடக்குமுறைச் சம்பவங்கள் உள்ளடக்குகின்றன. இந்த அறிக்கையில், பொலிஸ், ஆயுதப் படைகள், மதக் குழுக்கள் மற்றும் ஏனையோர் மத்தியில் அரசியல்வாதிகள் உட்பட அரசு அல்லது அரசு சாரா இயந்திரத்தின் கைகளில் போராட்டம், எதிர்ப்பு, மீறுதல், விசாரணைக்கு எதிரான சவால் அல்லது உரிமை மீறல்களைப் பதிவுசெய்யும் முயற்சி, சமூக அநீதி ஆகியனவற்றின் செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கு "கருத்து வேறுபாடு" பரவலாக வரையறுக்கப்பட்டுள்ளது. "அடக்குமுறை" என்பது கருத்து வேறுபாடுகளின் செயல்களை ஒடுக்குவதற்கு மேற்கூறிய அரசு அல்லது அரசு சாராதவர்கள் மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சியாகவும் வரையறுக்கப்படுகிறது. மனித உரிமைகளை மறுக்கும் எந்தவொரு சொல்லாட்சியும், உரிமைகளை அழிக்கும் சாத்தியம் இருப்பதால், கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதாகவும் கருதப்படுகிறது.*

***கண்ணோட்டம்:*** *2022இல், சுதந்திரத்திற்குப் பிறகு, கொவிட் 19 தொற்றுநோய்க்கும் மற்றும் தவறான நிதி நிர்வாகத்திற்கும் மத்தியில், வெளிநாட்டுக் கையிருப்பு குறைவு மற்றும் அதிக சர்வதேச கடன் ஆகியவற்றின் காரணமாக, மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை சந்தித்தது. அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு மற்றும் விலைவாசி உயர்வு ஆகியன மக்கள் வீதிகளில் இறங்கி ஜனாதிபதியைப் பதவி விலகக் கோரி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தள்ளியது. போராட்டங்கள் அதிகரித்ததையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறிய அதேவேளை, அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்களை கைது செய்து மிகவும் அடக்குமுறையிலான அணுகுமுறயொன்றை புதிய அரசாங்கம் எடுத்தது. ஊழல் புலனாய்வு சுட்டெண்ணில் இலங்கை மேலும் கீழிறங்கிய அதேவேளை, நீதிமன்றங்களில் அவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ஒரு தொகையைக் கொண்ட ஊழல் மற்றும் ஏனைய குற்றவியல் வழக்குகளில் இருந்து ஒரு தொகையைக் கொண்ட அரசியல்வாதிகளும் மற்றும் உயர் தோற்றப்பாட்டிலான அரசியல்வாதிகளும் விடுவிக்கப்பட்டனர். அதிக ஊழல், இராணுவமயமாக்கல் மற்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலில் கடுமையான பிரச்சினைகள் உள்ள போருக்குப் பிந்திய நாடாக, மொத்த மனித உரிமை மீறல்கள் பல தசாப்தங்களாக இன்னும் தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமையுடன் உள்ளன. ஒக்ரோபரில், இலங்கையின் நிலைமையை UNHRC மீளாய்வு செய்து, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு புதிய தீர்மானத்தை நிறைவேற்றியதுடன், அது இலங்கை அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது. நாட்டில் நடக்கும் பல மீறல்கள் குறித்து ஆழ்ந்த கவலையை OHCHRஆல் பெப்ரவரியில் தயாரிக்கப்பட்ட அறிக்கை வெளிப்படுத்தியது.*

***விடயப் புதுப்பிப்புகள்:*** *பதிப்பாசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையில் இலங்கை அரசை ஹேக்கில் உள்ள மக்கள் தீர்ப்பாயம் குற்றவாளியாகக் கண்டறிந்தது. 2021 ஒகஸ்டில் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்க, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் [Prevention of Terrorism Act (PTA)] கீழ் 6 மாத தடுப்புக்காவலின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 20 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனித உரிமைகள்*

*சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த உள்ளூர் புகைப்பட ஊடகவியலாளர் ஒருவருக்கு 470 நாட்களைக் கொண்ட தடுப்புக்காவலின் பின்னர் பிணை வழங்கப்பட்டது. 2021 மே மாதம் மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வை நடத்தியதற்காக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஏழு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு பேர் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டனர். ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தின் முக்கிய சாட்சி ஒருவர், நீதவான் நீதிமன்றில் தாம் வழங்கிய முன்னைய சாட்சியம் பொய்யானது எனவும், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அலுவலர்களின் செல்வாக்கின் கீழ் வழங்கப்பட்டுள்ளதாகவும், புலனாய்வு அலுவலர்களைச் சந்திப்பதற்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் எக்னெலிகொட பற்றி தான் எந்த முன்னறிவும் கொண்டிருக்கவில்லை எனவும் மேலும் தெரிவித்துள்ளார். "கடத்தல்களுக்கு நிகரான முறையொன்றில்" உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் மேற்கொள்ளப்படும் கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள் ஆகியன குறித்து பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் (BASL) கவலை தெரிவித்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர் செயலார்வலர்களை விடுவிக்கக் கோரி ஒரு தொகையைக் கொண்ட பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. 2015இல் எதிர்க்கட்சி அரசியல் கட்சியொன்றின் உறுப்பினர்களை சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டில் ஏற்கனவே குற்றவாளிகளாகக் காணப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர மற்றும் மேலும் இருவர் தமது மேன்முறையீட்டின் போது நிரபராதிகளாக விடுவிக்கப்பட்டனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரவின் கொலைச் சம்பவம் தொடர்பில் 2021 ஜூனில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருமான துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பை இடைநிறுத்தி மீஉயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின் அடிப்படையில் 2021 ஜூனில் அவருக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை இடைநிறுத்தி மீஉயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின் அடிப்படையில், மீண்டும் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலை அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டார். 1999இல், சப்ரகமுவ முன்னாள் சபை உறுப்பினர் ரஞ்சித் நந்தசேன கொலை வழக்கில் இருந்து முன்னாள் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் ஹசித சமந்த குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜன் ராமநாயக்கவுக்கு நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் இரண்டு வருட இடைநிறுத்தப்பட்ட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், நீதிபதிகளை ஊழல்வாதிகள் என்று கூறியதற்காக நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக அவருக்கு எதிரான முந்தைய வழக்கிற்காக ஜனாதிபதி மன்னிப்பும் வழங்கினார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்டோருக்கு பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பானதாக கூறப்படும் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மீஉயர் நீதிமன்றம் அவர்களுக்கு பயணத்தடை விதித்துள்ளது.*

***ஊடக அடக்குமுறை மற்றும் கருத்துச் சுதந்திரம்:*** *போராட்டம் ஒன்று குறித்து அறிக்கையிடுவதிலிருந்து மட்டக்களப்பை தளமாகக் கொண்ட ஒரு ஊடகவியலாளருக்கு தடை விதித்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது உட்பட சில நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க பல ஊடகவியலாளர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், அனுமதிக்கப்படவும் இல்லை. சிரேஷ்ட பொலிஸ் அலுவலர்கள் தக்கவைத்துள்ளதாக சார்த்துரைக்கப்படுகின்ற சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் செய்தி வெளியிட்டதற்காக பத்திரிகைப் பதிப்பாசிரியர் சமிந்த சேனாரத்னவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. சட்டவிரோத வியாபாரம் ஒன்றின் காட்சிகளை வெளியிட வேண்டாம் எனக் கோரி அரசியல்வாதியினால் மாகாண நிருபர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டார். IBC தமிழ் இணையத்தளத்தில் பணிபுரியும் தமிழ் ஊடகவியலாளர் லக்ஷமன் தேவபதீரன் ராஜாங்க அமைச்சர் தலைமையிலான அரசியல் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டார். மார்ச் 31 அன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தனிப்பட்ட இல்லத்திற்கு முன்னால் நடைபெற்ற போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற குறைந்தது 6 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்ட அதே வேளை, 9 ஊடகவியலாளர்களும் மற்றும் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களும்*

பொலிஸாராலும் மற்றும் இராணுவத்தினராலும் தாக்கப்பட்டதாகச் சார்த்துப்படுகிறது. மறுநாள், போராட்டத்தின் போது ஏற்பட்ட சேதங்கள் குறித்து செய்தி வெளியிட்ட ஊடகவியலாளர்களை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் பணிப்பாளர் அச்சுறுத்தினார். இதே போராட்டம் குறித்த தகவல்களைப் பரப்பிய தனியார் தொலைக்காட்சிக்கு எதிராக விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் [Inspector General of Police (IGP)] உத்தரவிட்டார். ஜூலை மாதம் GoGotaGama போராட்டத் தளத்தில் இராணுவத் தாக்குதல் குறித்து செய்தி சேகரிக்கும் போது ஆகக்குறைந்தது ஐந்து ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். சிலர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர், அவர்களின் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன அத்துடன் பதிவு செய்யப்பட்ட காணொளிகள் இராணுவத்தால் வலுக்கட்டாயமாக நீக்கப்பட்டன. ஜூலையில் பிரதமர் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தில் ஏற்பட்டிருந்த பதற்றமான சூழ்நிலை குறித்து செய்தி சேகரிக்கும் போது, ஆகக்குறைந்தது எட்டு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். அரசாங்கத்தை அவமதிக்கும் வகையில் உள்ளடக்கத்தை வெளியிட்டமை தொடர்பாக சமூக ஊடகச் செயலார்வலர் ஒருவர் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார். மற்றொருவர் முகநூல் கருத்து தொடர்பாக ஐந்து மணித்தியாலங்கள் விசாரிக்கப்பட்டார். பல 'யூடியூபர்கள்' வரவழைக்கப்பட்டு, அவர்களின் 'யூடியூப்' அலைவரிசைகளின் உள்ளடக்கங்கள் குறித்து விசாரிக்கப்பட்டனர். ஒரு கல்வி நிறுவனம் அளித்த முறைப்பாடொன்று மீது சில உள்ளடக்கத்தை நீக்க 'யூடியூப்' அலைவரிசைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. சமூக ஊடகங்களில் அரசாங்கத்தை விமர்சித்ததற்காக அரச தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிந்த பெண் ஊடகவியலாளர் ஒருவரும், பதுளை மாவட்டத்தில் ஆசிரியர் ஒருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவளித்ததற்காக ஒரு தொகையைக் கொண்ட இதழியலாளர்கள், சமூக ஊடக உள்ளடக்கத்தை உருவாக்குபவர்கள் மற்றும் செயலார்வலர்கள் பொலிஸாரால் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டனர். தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினதும் மற்றும் பாதுகாப்பு அமைச்சினதும் அறிவுறுத்தலின் பேரில், சமூக ஊடகங்களுக்குத் தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டது. போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறை தொடர்பாக ஒரு பெண் தொலைக்காட்சித் தொகுப்பாளர் உட்பட சமூக ஊடக குழுவின் 3 நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். அரசாங்க ஊழியர்கள் தங்கள் கருத்துக்களை சமூக வலைதளங்களில் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும் என அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. ஒரு கிராமத்தில் குழந்தைகளின் போஷாக்கு குறைபாடு குறித்து ஊடகங்களுக்குத் தெரிவித்ததற்காக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு மருத்துவர் உட்பட அரசாங்கத்தை விமர்சித்ததற்காக பல அரசாங்க அலுவலர்கள் கைது செய்யப்பட்டு, ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இரு நாடாளுமன்ற நிருபர்களை மூன்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கி அச்சுறுத்தியதுடன், அவர்களது கையடக்கத் தொலைபேசிகளையும் பறித்துச் சென்றதாகச் சார்த்துரைப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்றில் பொலிஸாருக்கும் மற்றும் பிரதேசவாசிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டார். ஒரு சில சம்பவங்களில், எரிபொருள் வரிசைகளில் ஏற்பட்டிருந்த பதற்றமான சூழ்நிலைகள் குறித்து செய்தி சேகரிக்கும் போது, பல ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். நொவம்பரில் முல்லைத்தீவு பத்திரிகையாளர் கழகத்திற்குச் சென்ற இராணுவ வீரர்கள், அவர்களது ஊடக நிலையத்துடன் தொடர்புடைய முக்கிய நபர்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு கோரினர்.

***ஒன்றுகூடும் சுதந்திரத்தின் அடக்குமுறை:*** இடதுசாரி அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்பட்டனர். கொழும்பில் உள்ள மற்றுமொரு இடதுசாரி அரசியல் கட்சியின் அலுவலகம் ஒன்றையும் பொலிஸார் சோதனையிட முயன்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் போராட்டங்களில் கலந்து கொள்ள தடை விதித்து, நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொழிற்சங்க நடவடிக்கை ஒன்று திட்டமிடப்பட்டிருந்த போது, தொழிற்சங்கத்திற்கும் மற்றும் அதன் தலைவருக்கும் எதிராக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொழிற்சங்கவாதிகள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதுடன், போராட்டங்களில் அவர்களது சம்பந்தம் குறித்து அவர்கள் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். வட மாகாணத்தில் உள்ள கிளிநொச்சியில் அமைந்துள்ள அரச சார்பற்ற அமைப்பொன்றை, அவர்கள் பேராட்டமொன்றைத்

திட்டமிட்டிருந்த வேளை, பொலிஸார் சோதனையிட்டனர். இராணுவத்தினரின் நில அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிலாளர் தொழிற்சங்கம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், பெண்கள் உரிமை செயலார்வலர்கள், குடியிருப்பாளர்கள் ஒழுங்குபடுத்திய போராட்டங்களையும் மற்றும் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு ஆகியவற்றில் நடத்தப்பட்ட பல நினைவேந்தல் நிகழ்வுகளையும் மற்றும் போராட்டங்களையும் பொலிஸார் தடுத்ததுடன், அவர்களைக் கலைந்து போகச்செய்தார்கள். நினைவேந்தல் நிகழ்வுகளுக்கும் மற்றும் போராட்டங்களுக்கும் தடை விதித்து, ஒரு தொகையைக் கொண்ட நீதிமன்ற உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன. மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டவை உட்பட, அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் பலவற்றின் மீது கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் ஏவப்பட்டன. மத்திய இலங்கையில் உள்ள ரம்புக்கனவில் நடைபெற்ற அரசுக்கு எதிரான போராட்டத்தின் போது, போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நேரடித் தோட்டாக்களைச் சுட்டதில், ஒரு போராட்டக்காரர் கொல்லப்பட்டார் மற்றும் 14 பேர் காயமடைந்தனர். எரிபொருள் கோரி நடைபெற்ற போராட்டத்தில், பொலிஸ் முச்சக்கர வண்டியொன்றைச் சேதப்படுத்தியதாகக் கூறப்படும் போராட்டக்காரர் ஒருவருக்கு 3½ வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. IMFஉடனான சந்திப்பு திட்டமிடப்பட்ட போது, இரண்டு அரசாங்கக் கட்டிடங்களின் நுழைவாயில்களை மறித்ததற்காக 21 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். ஜனாதிபதியை பதவி விலகக் கோரி பல முக்கிய அரசாங்க கட்டிடங்களைப் போராட்டக்காரர்கள் கையகப்படுத்திய இரு வாரங்களுக்குப் பின்னர், ஜூலை 22 அன்று, இராணுவத் துருப்புக்கள் ஆக்கிரமிக்கப்பட்ட கட்டிடங்களைத் தாக்கி, அமைதியான முறையில் வளாகத்தைக் கையளிப்பதற்கு ஏற்கனவே போராட்டக்காரர்கள் உடன்பட்ட போதும், ஆகக்குறைந்தது 50 பேரைக் காயப்படுத்தியும், ஆகக்குறைந்தது 9 பேரைக் கைது செய்தும் அவர்களை வலுக்கட்டாயமாக அகற்றினார்கள். மாணவர் சங்கச் செயலார்வலர் ஒருவர் கடத்தப்பட்டு, பின்னர் அவர் குறித்து நன்கு அறியப்பட்ட மாணவர் தலைவர்களிடம் விசாரித்ததை அடுத்து, அவர் வீதியோரத்தில் விடப்பட்டார். பெருமளவு போராட்டத் தலைவர்களும் கடத்தல் போன்ற முறையில் கைது செய்யப்பட்டனர், இருப்பினும், அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் பின்னர் கூறினர். காலிமுகப் போராட்டத் தளத்துடன் சம்பந்தப்பட்டிருந்த ஆகக்குறைந்தது 27 போராட்டக்காரர்களுக்கு எதிராக பயணத் தடை விதிக்கப்பட்டது. மே மாதத்தில், கொழும்பில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டத் தளம் தாக்கப்பட்டதுடன், போராட்டக்காரர்களும் தாக்கப்பட்டனர். ஜூலை மாதம், எம்பிலிப்பிட்டியவில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டத் தளம் ஒன்று குண்டர்களால் தாக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. ஜூலையில், ஜனாதிபதி செயலகத்திற்குள்ளும் மற்றும் வீட்டிற்குள்ளும் பிரவேசித்த நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் கைது செய்யப்பட்டனர். ஓகஸ்ட்டில், IUSF அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பிக்கு சம்மேளனத்தின் கூட்டுநர் வண. கலேவெல சிறிதம்ம தேரர் உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முதலிகே மற்றும் சிறிதம்ம தேரர் ஆகியோர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த செயலார்வலர்களை விடுவிக்கக் கோரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு போராட்டம் கண்ணீர்ப்புகை மற்றும் நீர் தாக்குதல்களைப் பயன்படுத்தி கலைக்கப்பட்டதுடன், அதே மாதத்தில் 27 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவாக பாரிஸில் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த தமிழ் பிரான்ஸ் பிரஜை ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்த போது, கைது செய்யப்பட்டார். இலங்கையின் போராட்டங்களை ஆதரித்த பிரித்தானிய சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவரின் கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டதுடன், பின்னர் அவரது 'விசா' இடைநிறுத்தப்பட்டு, நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரப்பட்டது. செப்ரெம்பரில், ஜனாதிபதி விக்கிரமசிங்க கொழும்பு நகரின் பல பகுதிகளை உள்ளடக்கிய உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்திய பின்னர், 84 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதுடன், 7 பேர் பொலிஸ் தாக்குதல்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

**சட்ட மற்றும் கொள்கை மாற்றங்கள்:** இலங்கையில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மத்தியில், அவசரகால நிலை 2022 ஏப்ரல் முதல் ஜூலை வரை மூன்று தடவைகள்

*பிரகடனப்படுத்தப்பட்டதுடன், பெரும் எண்ணிக்கையிலான ஊரடங்குச் சட்ட உத்தரவுகளுடன் பொது வீதிகள் உட்பட பொது இடங்களில் பொதுமக்கள் கூடுவதும் தடைசெய்யப்பட்டது. பொது ஒழுங்கைப் பேணுவதற்காக, ஆயுதப் படைகளுக்கு அழைப்பு விடுக்கும் மாதாந்த வர்த்தமானிகள் ஜூலை மற்றும் செப்ரெம்பர் தவிர, ஆண்டு முழுவதும் தொடர்ந்து இராணுவமயமாக்கலைக் குறிக்கின்றன. ஜனவரி 2022இல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டன. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்ததாகக் கூறப்படும் தனிநபர்களின் தடைப்பட்டியலில் இருந்து ஆறு சர்வதேச புலம்பெயர் தமிழ் அமைப்புகளை இலங்கை நீக்கிய அதே வேளை, கவிஞர் அஹ்னாப் ஜசீம் அந்தப் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்கள் தொடர்பான தகவல்களை வெளியிட மறுத்த நாடாளுமன்றச் செயலகம், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது தகவல் அறியும் உரிமையைக் கட்டுப்படுத்துவதுடன், தகவலுக்கான அணுகலையும் இதழியலாளர்களுக்கு கட்டுப்படுத்துகிறது. செப்ரெம்பரில், RTI ஆணைக்குழுவில் நடைபெற்ற விசாரணையின் போது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை வழங்க இலங்கைப் பொலிஸ் மறுத்துவிட்டது. ஜனவரி 2022இல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் (PTA) சில திருத்தங்களை அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டது. இருப்பினும், மனித உரிமைக் குழுக்களின் கூற்றுப்படி, மாற்றங்கள் மிகச்சிறியதாகவும், போதுமானதாகவும் இல்லை என்பதுடன், PTAஉடன் இருக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வும் காணப்படவில்லை. ஓகஸ்ட் 2022இல், சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு (PTA) பதிலாக, மேலும் "தளர்வான" ஏற்பாடுகளுடன், புதிய 'தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை' அறிமுகப்படுத்துவதாக இலங்கையின் நீதி அமைச்சர் அறிவித்தார். உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தின் கீழ், பல முக்கிய அரசாங்கக் கட்டிடங்கள் உட்பட கொழும்பில் புதிய உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் செப்ரெம்பர் 23 அன்று வெளியிடப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட பலர் இந்த நடவடிக்கையின் சட்டவிரோதத்தைச் சுட்டிக்காட்டியதால், இது பின்னர் மீளப்பெறப்பட்டது. செப்ரெம்பரில், "புனர்வாழ்வு பணியகச் சட்டம்" என்ற தலைப்பில் ஒரு சர்ச்சைக்குரிய வரைவுச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. மனித உரிமைச் செயலார்வலர்கள் மற்றும் பிறர் இந்தச் சட்டமூலம், சமீபத்திய போராட்டங்களில் கலந்து கொண்டவர்களைக் குறிவைத்து, நீதித்துறை நடைமுறைகளைப் பின்பற்றாமல், கட்டாய மறுவாழ்வு செயல்முறையொன்றின் மூலம் அவர்களை அனுப்பும் முயற்சி என்று கூறினர். பல்-எண்ணிக்கையிலான சந்தர்ப்பங்களில், தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுக்கும் முயற்சியாக, ஜனாதிபதி சில சேவைகளை அத்தியாவசியச் சேவைகளாக அறிவித்தார்.*

***சிவில் சமூகத்தின் மீதான அடக்குமுறை:*** *தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கண்டித்தும், தொழிலாளர் வேலைநிறுத்தங்களைத் தடைசெய்வதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதை முன்மொழிந்தும் பல பிரச்சனைக்குரிய அறிக்கைகள் அரசாங்க அமைச்சர்களாலும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் வெளியிடப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, மனித உரிமைகள் பாதுகாப்பாளர்களைக் கேலி செய்ததுடன், பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் கடமைகளுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு இடையூறு செய்ய முடியாது என வாதிட்டார். உயிர்த்த ஞாயிறு வெடிகுண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஊக்கத்துடன் இயங்குதலுக்கு பெயர் பெற்ற செயலார்வலர் ஒருவர் கைது செய்யப்பட்டார். பல செயலார்வலர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வரவழைக்கப்பட்டு, மணிக்கணக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், சிலர் கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டனர். TIDஇன் பொலிஸ் அலுவலர்கள் பல அரச சார்பற்ற அமைப்புகளுக்குச் சென்று, பணியாளர்களினதும் மற்றும் நிதியளித்தவர்களினதும் விவரங்களை வழங்குமாறு கோரினர். மட்டக்களப்பு மாவட்டச் சிவில் சமூக மன்றத்தின் தலைவர் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் ஆகிய இரு மாதங்களில் பொலிஸாரால் அழைக்கப்பட்டிருந்தார். ஜூலை 9 அன்று, ஜனாதிபதி செயலகத்தையும் மற்றும் பிற கட்டிடங்களையும் போராட்டக்காரர்கள் கையகப்படுத்திய போது ஏற்பட்ட வன்முறையில்,*

*பொலிஸார் தன்னைப் பொய்யாக சிக்கவைக்க முயற்சிப்பதாக வலியுறுத்தி, மற்றொரு செயலார்வலர் ஓர் அடிப்படை உரிமைகள் வழக்கைத் தாக்கல் செய்தார்.*

***ஏனைய சம்பவங்கள்:*** *ஓர் அரசியல்வாதி தன்னைப் பதவியிலிருந்து நீக்க முயற்சிப்பதாக காணி ஆணையாளர் தெரிவித்தார். ஊடக நேர்காணல்களில் அரசாங்கத்தை விமர்சித்த லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினதும் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினதும் (PUCSL) தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரலில், போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வாகனப் பதிவு எண்கள் இல்லாத மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்த இராணுவ வீரர்களை தடுத்து நிறுத்திய பொலிஸ் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்தார். அரசாங்கத்தினாலல் விநியோகிக்கப்பட்ட சத்துணவு குறைநிரப்பியில் அதிக அளவு அஃப்லாடாக்சின் கண்டறியப்பட்டதை வெளிப்படுத்திய சுகாதார தொழிற்சங்கவாதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் அச்சுறுத்தியுள்ளார். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள், புலனாய்வு அலுவலர்கள் தங்களைப் பின்தொடர்ந்ததாகத் தெரிவித்தனர். பெப்ரவரியில், தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் இளைஞர் பிரிவு உதவிச் செயலாளர் கடத்தல் முயற்சிக்கு உட்படுத்தப்பட்டார். செப்ரெம்பரில், மட்டக்களப்பில் மனித உரிமை செயலார்வலர் ஒருவரும் மற்றும் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெண் உறுப்பினர் ஒருவரும் பொலிஸ் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டனர்.*

## *2. கண்ணோட்டம்*




*இலங்கையில் வருடத்தின் ஒரு பெரும்பகுதிக்கு பல கிலோமீட்டர்கள் நீளமான எரிபொருள் வரிசைகள் ஒரு பொதுவான காட்சியாக இருந்தது. புகைப்பட உபயம்: FT*

**பொருளாதார நெருக்கடி:** வெளிநாட்டுக் கையிருப்பு இல்லாமை மற்றும் அதிக வெளிநாட்டுக் கடன், கொவிட் - *19* தொற்று நோயின் தாக்கம் மற்றும் நிதி முறைகேடு ஆகியனவற்றினால் விளைந்த இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது உயர் பணவீக்கம், அடிக்கடியிலான மின்வெட்டு, பொருட்களின் இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும் என்பதனால் எரிபொருளினதும், சமையல் எரிவாயுவினதும், அத்தியாவசிய மருந்துகளினதும் மற்றும் பிற பொருட்களினதும் தட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு இட்டுச்சென்றது. மேலும், இந்த நிலைமையானது அதிகரித்த போஷாக்குக் குறைபாட்டுக்கும் மற்றும் பட்டினிக்கும் வழிவகுத்தது என்று ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. ஏப்ரலில், வெளிநாட்டுப் பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கடன் சேவைப்படுத்தலின் இடைநிறுத்தம் காரணமாக, மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவை *[Moody's Investors Service ("Moody's")]* இலங்கையின் கடன் மதிப்பீடுகளை *Caa2*இலிருந்து *Ca*க்குக் குறைத்தது. மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லாததால், மார்ச் மாதத்தில், சில அறுவைச் சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. ஆண்டு சராசரி பணவீக்கம் *46%*ஆக இருந்தது, அதேவேளை, ஆண்டின் இறுதியில் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் உணவுப் பொருட்களின் பணவீக்கம் ஆகியன முறையே *132%* மற்றும் *64%* என பதிவாகியுள்ளன.[1] *CPA*ஆல் நாடளாவியரீதியில் நடத்தப்பட்ட அளவெடுப்பில், *79%* மக்கள் தங்கள் பொருளாதார நிலை முந்தைய ஆண்டை விட மோசமாக இருப்பதாகக் கூறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், ஆண்டு இறுதிக்குள் தடையில்லா எரிபொருள் மற்றும் மின்சார விநியோகத்தை அரசாங்கம் படிப்படியாக உறுதி செய்வதைச் சமாளித்துள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் *(CPA)* நடத்திய நாடளாவிய ஆய்வில், *79%* மக்கள் தங்கள் பொருளாதார நிலை முந்தைய ஆண்டைக் காட்டிலும் மோசமடைந்துள்ளதாகக் கூறுவதாகக் கண்டறிந்துள்ளது.[2] இலங்கையின் *37%* குடும்பங்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாகவும், சுமார் *41%* குடும்பங்கள் உணவு உண்பதைக் குறைத்துள்ளதாகவும் உலக உணவுத் திட்டம் அறிக்கையிட்டுள்ளது.[3] சுமார் *150* அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.[4,5]

**ஊழல்:** *2022* ஜனவரியில் *94*இல் இருந்து *102*ஆகவும்[6] *2023* ஜனவரியில் *101*ஆகவும்[7] ஊழல் புலனாய்வு சுட்டெண்ணில் இலங்கை மேலும் சரிவடைந்தது. அரசியல்வாதிகள் மற்றும் உயர் தோற்றப்பாட்டிலான அரசு அலுவலர்கள் ஆகியோர் ஆகக்குறைந்தது *7* வழக்குகளில் ஊழல்

---

[1] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/press_20221230_inflation_in_december_2022_ccpi_e.pdf
[2] https://srilankabrief.org/79-of-sri-lankans-economic-situation-has-got-worse-during-the-last-year/
[3] https://docs.wfp.org/api/documents/WFP-0000145643/download/?_ga=2.25620920.407229744.1675774438-458050933.1675774438
[4] https://economynext.com/sri-lanka-facing-shortage-of-150-essential-drugs-govt-looking-to-boost-local-production-101449/
[5] https://www.aljazeera.com/gallery/2022/12/25/sri-lanka-cancer-patients-struggle-amid-economic-chaos
[6] https://www.newsfirst.lk/2022/01/25/sri-lanka-drops-from-94-to-102-in-corruption-perceptions-index/
[7] https://www.newsfirst.lk/2023/02/01/sri-lanka-ranked-101-in-corruption-perception-index-2022/

குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.[8] வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு சகல ஆணையாளர்களும் ஒப்புதல் அளிக்கவில்லை என வலியுறுத்தி, அந்த வழக்குகளில் இரு வழக்குகள் இலஞ்சத்தையும் மற்றும் தரகுக்கூலியையும் விசாரிப்பதற்கான ஆணைக்குழுவினால் *[Commission to investigate Bribery and Commission (CIABOC)]* திரும்பப் பெறப்பட்டன. அவர்களில் ஒருவரான முன்னாள் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் மற்றும் ஏனையோருக்கும் எதிராக தேர்தல் பிரசாரத்திற்காக அரசாங்க ஊழியர்களைப் பணிக்கமர்த்திய குற்றச்சாட்டின் பேரில், ஆணைக்குழுவால் வழக்கு மீள்தாக்கல் செய்யப்பட்டது. 'திவிநெகும' திட்டம் மற்றும் அரச பணத்தில் காணிக் கொள்வனவு ஆகியன தொடர்பாக ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்சவுக்கு எதிரான மேலும் இரு வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மீளப்பெறப்பட்டன. ஒரு வழக்கில்,[9] சந்தேகத்திற்கு இடமின்றி குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வழக்காளி தவறிவிட்டதாக நீதிமன்றம் முடிவு செய்தது. மத்திய வங்கி பிணைமுறிகள் தொடர்பான ரவி கருணநாயக்கவிற்கு எதிரான வழக்கில், பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருக்கு எதிரான மற்றுமொரு வழக்கை மீளப்பெற முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்த அதே வேளை, முன்னாள் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான மற்றொரு வழக்கு வழக்காளியினால் வாபஸ் பெறப்பட்டது.[10] ஒரு புறம்பான வழக்கில், வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி, அரசாங்கக் காணியில் உள்ள அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்புகளை அகற்ற ரூ.64 மில்லியன் இலஞ்சம் கோரிய சம்பவமொன்று தொடர்பில் முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.[11] உயர் தோற்றப்பாட்டிலான அரசியல்வாதிகளுக்கும் மற்றும் அரச அலுவலர்களுக்கும் எதிராக நடந்து வரும் 19 சட்ட வழக்குகளை திரும்பப் பெறவும் அத்துடன் தடை செய்யவும் CIABOCஇன் இரு ஆணையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதில் 13 வழக்குகள் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களுக்கு எதிரானவை எனவும் 'டெய்லி மிரர்' செய்தி வெளியிட்டது, தனது அறிவுறுத்தல்களைப் பின்பற்றாததிற்காக, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சட்ட அலுவலர் ஒருவரை CIABOCஇன் உறுப்பினர்களில் ஒருவரான சந்ரா நிமால் வகிஷ்ட அச்சுறுத்தியதாகவும் அறிக்கையிடப்பட்டது.[12] இலங்கையில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு பொறுப்புக்கூறக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவைத் தொடர்ந்து, ஓகஸ்ட் 2022 முதல் முன்னாள் ராஜபக்ச அரசாங்கத்துடன் தொடர்புடைய பல முக்கிய அரசியல்வாதிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் எதிராகப் பயணத் தடைகள் விதிக்கப்பட்டன.

**பொறுப்புக்கூறல்:** 2012 வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலை தொடர்பாக, ஜனவரி 2022இல், முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் லமாஹேவாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட அதே வேளை, ஏனைய சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டனர். நிலுவையில் தீர்ப்பு இருந்தபோதிலும், முதல் சந்தேகநபரான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நியோமல் ரங்கஜீவா பதவி உயர்வு பெற்றார், இது வழக்கில் அரசியல் தலையீடு இருக்கக்கூடும் என்பதைக் குறிக்கிறது. கொல்லப்பட்ட ஊடக ஊழியர்களுக்கும் மற்றும் பல தசாப்தங்களாக தண்டனையில் இருந்து விடுபடாத ஊடகவியலாளர்களுக்கும் எதிரான வேறு குற்றங்களுக்கும் நீதியைக் கோரி ஊடக உரிமைக் குழுவினரும் அத்துடன் படுகொலை செய்யப்பட்டதும் மற்றும் கடத்தப்பட்டதுமான

[8] தேர்தல் பிரசாரத்திற்கு சதொச அரசாங்க ஊழியர்களை ஈடுபடுத்தியமை குறித்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் மற்றும் ஏனையோருக்கும் எதிரான வழக்கு, (2) சமுர்த்தி பெறுனர்களுக்கு நட்டஈடு மற்றும் பணிக்கொடை ஆகியன வழங்கும் போது பசில் ராஜபக்சவுக்கு எதிராக திவிநெகும திட்ட நிதியை கையாடல் செய்தமை, (3) 2015 தேர்தலில் மகிந்த ராஜபக்சவின் புகைப்படத்துடன் பஞ்சாங்கம் அச்சிடுவதற்கு திவிநெகும திட்ட நிதியங்களை கையாடல் செய்தமை, (4) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு GI குழாய்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரம்புக்வெலவுக்கு எதிரான வழக்கு, (5) முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான மத்திய வங்கி பிணைமுறி வழங்கல் வழக்கு, (6) அவரது பதவிக்காலத்தில் இடம்பெற்ற நிதி முறைகேடுகள் மீது முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் கப்ராலுக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு தாக்கல்செய்யப்பட்டது, (7) பசில் ராஜபக்சவுக்கு எதிரான மல்வான காணி வழக்கு.

[9] 2015 தேர்தலின் போது, மகிந்த ராஜபக்சவின் புகைப்படத்துடன் 5 மில்லியன் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டதன் மூலம் திவி நெகும திணைக்களத்திற்கு 29.4 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது.

[10] https://www.dailymirror.lk/print/news/Ajith-Nivard-Cabraal-released-from-a-case/239-252975

[11] https://www.newswire.lk/2022/06/06/threatning-a-businessman-minister-prasanna-ranatunga-found-guilty/

[12] https://www.dailymirror.lk/opinion/Withdrawal-of-bribery-cases-against-politicians-and-their-allies-raises-eyebrows/172-235776

ஊடகவியலாளர்களின் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களும் கறுப்பு ஜனவரி இயக்கத்தை நினைவுகூர்ந்தனர். மே மாதத்தில், போரில் பாதிக்கப்பட்டவர்களையும் அத்துடன் ராஜபக்ச குடும்ப உறுப்பினருடன் ஏற்பட்டதாகக் கூறப்படும் தகராறு காரணமாக கொடூரமான தாக்குதலுக்கு உள்ளாகி கொல்லப்பட்ட வாசிம் தாஜுதீனையும் நினைவு கூருவதற்காக வடக்கிலும், கிழக்கிலும் மற்றும் கொழும்பிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. டிசம்பரில், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 17ஆவது நினைவு தினம் மட்டக்களப்பில் நடத்தப்பட்டது, மற்றுமொரு வழக்கு இன்னும் தண்டனையிலிலிருந்து விலக்கீட்டுரிமையில் உள்ளது. பரராஜசிங்கம் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 2021இல் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்கை வாபஸ் பெற்றதையடுத்து விடுதலை செய்யப்பட்டனர். 2009இல், உள்நாட்டுப் போரின் போது சரணடைந்து, கொல்லப்பட்டுள்ளதாகப் பரவலாக நம்பப்படுகின்ற விடுதலைப் புலி உறுப்பினர்களை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஆஜர்படுத்துமாறு இலங்கை இராணுவத்திற்கு, ஒரு முக்கியமான உத்தரவை வவுனியா உயர் நீதிமன்றம் டிசம்பரில் பிறப்பித்தது.[13]

**சர்வதேச சமுதாயம்:** மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது UNHCR அமர்வு பெப்ரவரி 28 அன்று தொடங்கியது. நாட்டில் நடக்கும் பல மீறல்கள் குறித்து ஆழ்ந்த கவலையை பெப்ரவரியில் OHCHRஆல் வெளியிடப்பட்ட அறிக்கை வெளிப்படுத்தியது. பயங்கரவாதத் தடுப்புச் சட்ட (PTA) திருத்தம் ஒரு முக்கியமான நடவடிக்கையாக அங்கீகரிக்கப்பட்ட அதேவேளை, அந்தச் சட்டத்தின் மிகவும் சிக்கலான விதிகள் அப்படியே விடப்பட்டுள்ளதால், மாற்றங்கள் போதுமானதாக இல்லை என்றும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. 2022 ஏப்ரலில் இருந்து, இலங்கையின் அதிகாரவர்க்கத்தினரால் அமைதியான போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு விரிவானதும், நீடித்ததும் மற்றும் மீளச்செய்கின்றதுமான அவசரகால நடவடிக்கைகள் பயன்படுத்துவதைக் கண்டித்து, ஓகஸ்டில் மனித உரிமைகள் நிபுணர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், ஜெனிவாவில், ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 51ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினதும் மற்றும் கொவிட்-19இனதும் சூழலில், மனித உரிமை மீறல்கள் மற்றும் புதிய சவால்கள் ஆகியன மீதான பொறுப்புக்கூறலின் சிக்கல்கள் தீர்மானத்தில் ஆராயப்பட்டன. மனித உரிமை மீறல்கள் மற்றும் தற்போதைய இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை ஆகியன தொடர்பான புதிய தீர்மானத்தை இலங்கையின் அனுமதியோ அல்லது ஆலோசனையோ இன்றி முன்வைத்துள்ள நிலையில், அதனை இலங்கை திட்டவட்டமாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். நொவம்பரில், முன்னாள் பிரதமரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்வதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச சதி இருப்பதாக வலியுறுத்தினார்.

**போராட்டங்கள்:** 2022ஆம் ஆண்டு இலங்கையில் போராட்டங்களின் ஆண்டாகும், ஏனெனில் பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் வேறு பிரச்சினைகள் ஆகியன ஆளும் அரசாங்கத்தை ராஜினாமா செய்யக் கோரியும், அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கோரியும் மக்கள் வீதிகளில் போராட்டம் நடத்த வழிவகுத்தது. மார்ச் 31 அன்றும் மற்றும் ஏப்ரல் 1 அதிகாலையிலும், கொழும்பு புறநகரில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்திற்கு முன்னால் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் பொலிஸாராலும் மற்றும் இராணுவத்தினராலும் கண்ணீர் புகைக்குண்டினாலும் மற்றும் நீரினாலும் தாக்கப்பட்டனர். ஊடகவியலாளர்கள் உட்பட சுமார் 54 போராட்டக்காரர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்ட அதேவேளை, அவர்களில் சிலர் பொலிஸ் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் சார்த்துரைக்கப்படுகிறது.

[13] https://www.inform.lk/repression-of-dissent-december-2022/

*உடனடியாக, அரசாங்க எதிர்ப்பு போராட்டக்காரர்கள் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் அமைந்துள்ள காலிமுகத் திடல் நகரப் பூங்காவை ஆக்கிரமிக்கத் தொடங்கியதுடன், அந்த இடத்திற்கு ஆளும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவைப் பதவி விலகக் கோரி GoGotaGama (GGG/GoGotaVillage) எனக் பெயரிட்டனர். மே 9 அன்று, GotaGoGamaஇல் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், பிரதமர் மகிந்த ராஜபக்சவுடன் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட அரச சார்பு கும்பலால் தாக்கப்பட்டனர். தாக்குதலைத் தொடர்ந்து, கிளர்ச்சியடைந்த அரசாங்க எதிர்ப்புக் கும்பல், போராட்டக்காரர்களைத் தாக்கியவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன், அரசாங்க அரசியல்வாதிகளுக்குச் சொந்தமான பல வீடுகளும் மற்றும் சொத்துக்களும் சேதப்படுத்தப்பட்டன. அத்துடன் கும்பல் தாக்குதல்களின் போது, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 10 தனிப்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். அன்றைய தினம் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி பல அரசியல்வாதிகள் உட்பட 1,500க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். இதன் பின்னர், பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, புதிய பிரதமராக ரணில் விக்கிரசிங்க நியமிக்கப்பட்டார். ஜூலை 9 அன்று, போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியினதும் மற்றும் பிரதமரினதும் உத்தியோகபூர்வ இல்லங்கள் உட்பட பல முக்கிய அரசாங்கக் கட்டிடங்களுக்குள் பிரவேசித்து, அவற்றை ஆக்கிரமிக்கத் தொடங்கினர். இதன் விளைவாக, நாட்டை விட்டு வெளியேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ராஜினாமா செய்தார். இதனையடுத்து, புதிய ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். புதிய அரசாங்கம் பதவியேற்றதைத் தொடர்ந்து 3,000க்கும் மேற்பட்ட அரசாங்க எதிர்ப்பு போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*இலங்கையின் பெருமைமிகு அணிவகுப்பு (pride marches) இலங்கையில் முதன்முறையாக ஜூன் 11 அன்று வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும், ஜூன் 25 அன்று இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் நடைபெற்றது. GotaGoGamaஇல் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களில் அங்கம் வகித்த LGBTIQ+ செயலார்வளர்களால் கொழும்பு பெருமைமிகு அணிவகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நீண்ட காலமாக நிலவும் தேசியப் பிரச்சனைக்கு நீதி கோரியும், உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தும் அத்துடன் நீதி கோரியும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் மற்றும் செயலார்வலர்கள் வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ், பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் குழுவொன்று, தம்மை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி நாடளாவியரீதியில் கையொப்பப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.*

## *3. விடயப் புதுப்பிப்புகள்*

***ஜனவரி 2022***

*நெதர்லாந்தில் நிலவும் கொவிட் 19 கட்டுப்பாடுகள் காரணமாக, ஹேக்கில் உள்ள மக்கள் தீர்ப்பாயத்தில் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பாக அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த விசாரணை மே 2022க்கு ஒத்திவைக்கப்பட்டது. ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட முக்கிய மனித உரிமை வழக்குகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, பொய்யான சாட்சியங்களைத் தயாரித்த குற்றச்சாட்டின் பேரில் சட்டப்பூர்வ வழக்கை எதிர்கொண்டுள்ள நிலையில், அரசியல் பாதிப்புகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக, மனுதாரருக்கு எதிரான பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதைத் தடுக்கும் சான்றிதழைக் கோரி, பேராணை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.[14] 2021 டிசம்பரில், 18 மாத காவலுக்குப் பிறகு விடுவிக்கப்பட்ட, நீண்ட காலமாகக் காவலில் வைக்கப்பட்டிருந்த கவிஞர் அஹ்னாஃப் ஜசீம் தடுத்தவைத்தல் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த போதிலும், மேலதிகமாக ஒரு நாள் காவலில் வைத்ததிற்காக விளக்கமறியல் அலுவலருக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்தார்.*

***பெப்ரவரி 2022***

*ஓகஸ்ட் 2021இல் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்க, கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் 6 மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ரத்நாயக்க, முன்னாள் இராணுவ புலனாய்வு அலுவலர் என்பதுடன், லண்டனைத் தளமாகக் கொண்டதும், இலங்கையை மையமாகக் கொண்டதுமான Lanka-e-News செய்தி இணையத்தளத்திற்கு வழக்கமான தனிப்பட்ட பங்களிப்பாளர் ஆவார். 2010இல், இராணுவத்தினரால் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட மீதான வழக்கு விசாரணை 29 ஏப்ரல் 2022 வரை ஒத்திவைக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 20 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனித உரிமைகள் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி. தலைவரை முட்டையால் தாக்கிய சந்தேகநபர்கள் பொலிஸ் காவலில் காணாமல்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஊடக உரிமைச் செயலார்வலரும் அத்துடன் சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த ருஹுுணக், 2021 டிசம்பரில் அவர் செய்த முறைப்பாட்டிலிருந்து பொலிஸார் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாத நிலையில், அவர் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்து இரண்டாவது முறையாக முறைப்பாடு செய்தார்.*

***மார்ச் 2022***

*பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், 470 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த புகைப்பட ஊடகவியலாளர் முருகுப்பிள்ளை கோகிலன் தாசன் பிணையில் விடுவிக்கப்பட்டார். வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வின் புகைப்படங்களை வெளியிட்ட பின்னர், விடுதலைப் புலிகளின் சில புகைப்படங்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார். தேசியவாதக் குழுக்களின் இஸ்லாமிய வெறுப்புக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தன்னிச்சையாக கருவுறாமை அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டதாகக் கூறி கைது செய்யப்பட்ட மருத்துவ மருத்துவர் ஷாபி ஷிஹாப்தீன் 2021 டிசம்பரில் விடுதலை செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டு மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். இருப்பினும், அவர் தனது சம்பளப் பாக்கியைப் பெறுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியிருந்தது. அவரது சம்பள நிலுவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு*

[14] https://www.dailymirror.lk/latest_news/Shani-files-writ-petition-against-Presidential-Commission/342-229538

மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்களைச் சுட்டதற்காகவும் அத்துடன் ஒருவரைக் கொன்றதற்காகவும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர மற்றும் இரு சந்தேகநபர்கள் மேன்முறையீட்டின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஜனவரி 2015இல், சந்தேக நபர்களினால் வழிநடத்தப்பட்டதாகச் சார்த்துரைக்கப்படும் குழுவொன்று, வரவிருக்கும் தேர்தல் பேரணிக்கு மேடை அமைத்துக் கொண்டிருந்த சுமார் 200 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதனால், ஒருவர் இறந்ததுடன், ஏனையவர்களுக்கு காயம் ஏற்பட்டது.

**ஏப்ரல் 2022**

வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கு புத்தளம் மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் வழக்கில் தன்னைப் பொய்யாகக் குற்றஞ்சாட்டுவதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹிஸ்புல்லா 'ட்விட்டரில்' தெரிவித்துள்ளார். 2021 மே மாதம் மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வொன்றை நடத்தியதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஏழு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டனர்.



*பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஏழு மாதங்களுக்கும் மேலாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவதற்கு வழிவகுத்த போரில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நினைவு நிகழ்வு. புகைப்பட உபயம்: தமிழ் கார்டியன்*

**மே 2022**

மே 12 மற்றும் 13 ஆகிய தினங்களில், ஹேக் நகரில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் [Permanent People's Tribunal (PPT)] ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மே 17 அன்று, கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்கியமைக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு சவால்விடுத்து தாக்கல் செய்யப்பட்ட இரு அடிப்படை உரிமை மனுக்கள் விசாரணைக்கு முந்திய கட்டத்தில் மேலதிக விசாரணைக்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தன. புறம்பானதொரு வழக்கில், 2011இல் எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவரினதும் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மூவரினதும் கொலைக்களுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருமான துமிந்த சில்வாவை, 2021

*ஜூனில் அவருக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்புக்கு எதிராக இடைக்கால உத்தரவைப் பிறப்பித்து, அவரைக் கைது செய்யுமாறு மீஉயர் நீதிமன்றம் (SC) உத்தரவிட்டது. 2015இல், தேர்தல் பிரசாரங்களுக்கு அரசாங்க ஊழியர்களைப் பயன்படுத்தியதாக சார்த்துரைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக 30 மே 2022 அன்று, புதிய குற்றப்பத்திரிக்கையை இலஞ்சத்தினதும் அல்லது ஊழலினதும் சார்த்துரைகளை விசாரிக்கும் ஆணைக்குழு [Commission to Investigate Allegations of Bribery or Corruption (CIABOC)] தாக்கல் செய்தது. 2022 ஜனவரியில், தொழில்நுட்பச் சிக்கலைக் காரணம் காட்டி, அதே சம்பவம் மீதான வழக்கு CIABOCஆல் திரும்பப் பெறப்பட்டது.*

***ஜூன் 2022***

*ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நிரந்தர மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, முக்கிய சாட்சிகளில் ஒருவர் பல வருடங்களுக்கு முன்னர் நீதவான் நீதிமன்றில் தான் அளித்த வாக்குமூலத்தை நிராகரித்ததுடன், பொலிஸ் அலுவலர்களின் செல்வாக்கு காரணமாக முன்பு பொய் சொன்னதாக்க் கூறினார். பிரகீத் எக்னெலிகொடவை பற்றி தனக்கு முன்னர் எந்த அறிவும் இருக்கவில்லை எனவும் அவர் மறுத்துரைத்தார். 1999இல், சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரஞ்ஜித் நந்தசேன கொலை செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் ஹசித சமந்த விடுதலை செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டார். ஒரு தொலைக்காட்சி உரையாடல் நிகழ்ச்சியின் போது, நடந்துகொண்டிருக்கும் சட்ட வழக்குகொன்றின் தீர்ப்பினை முன்நிர்ணயித்தமைக்காக நீதித்துறைக்கு எதிராகக் குற்றஞ்சாட்டியதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜன் ராமநாயக்கவுக்கு இரண்டு வருட இடைநிறுத்தப்பட்ட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் கடந்த மாதம் மீஉயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின் அடிப்படையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருமான துமிந்த சில்வா குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலை அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டார்.*

*மே 9 அன்று, GoGotaGamaஇல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட வழக்கில், சட்டமா அதிபர் முன்னர் அறிவுறுத்தியபடி, நடந்துகொண்டிருக்கும் விசாரணைகளில் எந்தவிதமான செல்வாக்கும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஏன் இடமாற்றம் செய்யப்படவில்லை எனப் பொலிஸாரிடம் நீதவான் கேட்டார். தாக்குதலைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய சூழ்நிலையில் இருந்த மிக சிரேஷ்ட பொலிஸ் அலுவலராக தென்னக்கோன் விளங்கினார். போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில், இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஐந்து அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டனர். சட்ட அமுலாக்கப் பிரிவினரால் கடத்தப்பட்டதாகச் சார்த்துரைக்கப்படும் செயலார்வலர் அனுருத்த பண்டாரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.*

***ஜூலை 2022***

*போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலைத் தடுக்கும் வகையில் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் தென்னக்கோன் தவறியமை மீதான விசாரணைகள் தொடர்பிலான பொழிப்புக்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.*

*பொருளாதார நெருக்கடிக்கு அவர்களது சார்த்துரைக்கப்பட்ட பொறுப்புக்காக உயர் தோற்றப்பாட்டிலான அரசியல்வாதிகள் மற்றும் உயர் மட்ட அரச அலுவலர்கள் உட்பட 13 பிரதிவாதிகளுக்கு எதிராக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்காவினாலும் (Transparency*

*International Sri Lanka) மற்றும் சில தனிநபர்களாலும் இரு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஜனாதிபதி ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறிய பின்னர், ஏனையோர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரியதுடன், முன்னாள் நிதியமைச்சர்களான மகிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மன் மற்றும் வேறு சிரேஷ்ட நிதி அலுவலர்கள் ஆகியோருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதித்து மீஉயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.*

***ஓகஸ்ட் 2022***

*ஓகஸ்ட் 9 அன்று, "கடத்தல்களுக்கு நிகரான தன்மையொன்றில்" உரிய நடைமுறைக்கு இணங்காமல் கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள் ஆகியன மேற்கொள்ளப்படுதல் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் [Sri Lanka Bar Association (BASL) கடிதமொன்றை எழுதியது. கடத்தலுக்கு ஒப்பான தன்மையொன்றில் கைது செய்யப்பட்ட சுதந்திர ஊடகவியலாளரும் மற்றும் மாணவர் செயலார்வலருமான வெரங்க புஷ்பிகாவுக்கு 9 ஓகஸ்ட் 2022 அன்று கடுவெல நீதவான் பிணை வழங்கியிருந்தார். அரச தொலைக்காட்சியின் ஒளிபரப்பைச் சீர்குலைத்த போராட்டக்காரர் தனிஸ் அலிக்கு பிணை வழங்கப்பட்டது. ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய வழக்கில் நான்கு பொலிஸாருக்கு பிணை வழங்கப்பட்டது. 19 ஏப்ரல் 2022 அன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலை உயர்வு ஆகியவற்றுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் 24 பேர் காயமடைந்தனர். அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களை ஆதரித்த கன்னியாஸ்திரி கைது செய்யப்பட்டதுடன், பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது. நீதிபதிகளை ஊழல்வாதிகள் என்று கூறி நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்ஜன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டது. விசேட அதிரடிப்படையின் [Special Task Force (STF)] பொலிஸ் அலுவலர்களால் சிரச தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பான தமது விசாரணை மீது பத்திரிகை வெளியீடு ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு [Human Rights Commission (HRCSL)] விடுத்தது. இரு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன: (1) விசாரணை முடியும் வரை கொழும்பிற்கு வெளியே உள்ள சூழ்நிலைக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அலுவலரை இடமாற்றுதல், (2) சிவில் நடவடிக்கைகளின் போது உருமறைப்பு சீருடைகளைப் பொலிஸார் அணியக்கூடாது. ஓகஸ்ட் 22 அன்று, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி போராட்டக்காரர்களைக் கைது செய்வது குறித்து பொலிஸ் மாஅதிபருக்கு கடிமொன்றை HRCSL எழுதியது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது கடுமையாக சூழ்ச்சிதிறத்துடன் கையாளப்பட்டுள்ளதாகவும் அத்துடன் போராட்டக்காரர்களின் தவறான கைதுகளை நியாயப்படுத்த ஜனநாயக விரோதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. அரசாங்க எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் மீது மே 9 அன்று நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து பல பரிந்துரைகளை HRCSL வழங்கியது. பரிந்துரைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன: (1) சட்ட அமுலாக்கத்தினுள் குற்றவாளிகளைக் கண்டறிந்து, தகுந்த சட்ட நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க ஒரு குழுவை நியமித்தல், (2) சம்பவத்தின் போது பொலிஸ் மாஅதிபர், அவருக்குக் கீழ் பணிபுரிபவர்கள் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு இடையேயான தொலைபேசி உரையாடல்களை ஆய்வு செய்தல்.*

***செப்ரெம்பர் 2022***

*செப்ரெம்பர் 19 அன்று, ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் தனது தீர்ப்பை ஊடகவியலாளர்கள் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயம் வழங்கியதுடன், இதில், "ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சர்வதேச மனித உரிமைகள், குறிப்பாக வாழ்வதற்கான உரிமை, கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் பயனுள்ள தீர்வுக்கான உரிமை*

*ஆகியவற்றின் கடுமையான மீறல்களுக்கு" இலங்கை அரசாங்கம் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டது. போராட்டமொன்றின் போது, நீதிமன்ற உத்தரவை மீறியதற்காக கைது செய்யப்பட்ட உயர் தேசிய டிப்ளோமா [Higher National Diploma (HND)] மாணவர் சங்கத்தின் கூட்டுநர் ஹரித தர்ஷனவை செப்ரெம்பர் 16 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. முன்னாள் நிதியமைச்சரும் மற்றும் ராஜபக்ச குடும்ப உறுப்பினருமான பசில் ராஜபக்ச மருத்துவச் சிகிச்சைக்காக ஒரு மாத காலத்திற்கு அமெரிக்கா செல்ல மீஉயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது. மீஉயர் நீதிமன்றத்தினால் முன்னர் அறிவுறுத்தப்பட்டபடி தனக்கு சம்பள நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் கைது செய்யப்பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் CID சப்-இன்ஸ்பெக்டர் சுகத் மெண்டிஸ் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்து தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இரு மனுக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தல்களை அனுப்பி, 13 ஒக்ரோபர் 2022 அன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளது. செப்ரெம்பர் 09 அன்று, போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக தனது வாகனத்தின் ஒலிப்பானை எழுப்பிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டிருந்த சட்டத்தரணி துஷ்மந்த வீரத்ன, வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.*

***ஒக்ரோபர் 2022***

*உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தின் கீழ், அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தி கடந்த செப்ரெம்பரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்துச் செய்து வர்த்தமானியொன்றைப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டது. மனித உரிமைகள் வழக்கறிஞர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வழக்கு விசாரணையில், புத்தளம் மேல் நீதிமன்றில் மூன்றாவது தடவையாகவும் வழக்குத்தொடுநர் முன்னிலையாகவில்லை. நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிடியாணையொன்றைப் பிறப்பித்தது. பின்னர் அன்றைய தினம் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியதுடன், கடுமையான எச்சரிக்கைகளுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், 90 நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மாணவர் செயலார்வலர் ஹஷான் குணதிலக்க குறித்த வழக்கை தொடர்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்ததை அடுத்து, தங்காலை நீதவான் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார். இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கையின் உயர் மட்ட அரசியல்வாதிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்ட குழுவொன்றுக்கு எதிரான மனுவைத் தொடர்வதற்கு மீஉயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. நிதி முறைகேடு தொடர்பான வழக்கில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான வெளிநாட்டுப் பயணத்தடை நொவம்பர் 24 வரை நீடிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில், 2011இல், காணாமல் ஆக்கப்பட்ட செயலார்வலர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான சாட்சியங்களை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு அறிவித்தலொன்றை மீள-அனுப்பும் உத்தரவொன்றை இலங்கை மீஉயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது. 14 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் லியனகே சுனில் நிரபராதியாக விடுதலைசெய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டுள்ளார். அரச நிறுவனமான லங்கா சதொச நிறுவனத்துடன் தொடர்புடைய இலஞ்ச ஊழல் வழக்கொன்றில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இருவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

***நொவம்பர் 2022***

*காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆட்கொணர்வு மனு (பேராணை) விசாரணைக்கு அண்மையில் இரு தடவைகள் முன்னிலையாவதற்கு நீதிமன்ற அலுவலர்கள் தன்னை அனுமதிக்கவில்லையென எனக்*

*குறிப்பிட்டு பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, 03 நொவம்பர் 2022 அன்று பிரதம நீதியரசருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் [Inter University Student Federation (IUSF)] கூட்டுநர் வசந்த முதலிகேயின் அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்த பின்னர், அவரை நீதவான் ஒருவரினதும் மற்றும் நீதித்துறை வைத்திய அலுவலர் ஒருவரினதும் முன்னிலையில் ஆஜர்படுத்துமாறு மீஉயர் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. பயங்கரவாதக் குற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு செயலார்வலர்களான முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோருக்கு எதிரான பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளைக் கைவிடுமாறு அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கிடைக்கும் வரை, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் உத்தரவிட்டார். இருந்த போதிலும். பிணையில் விடுவிக்கப்பட்ட கல்வெல சிறிதம்ம தேரர் மீண்டும் கைது செய்யப்பட்டு, பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஜனாதிபதி மாளிகையில் போராட்டக்காரர்களால் ரூ.18 மில்லியன் ரொக்கம் கண்டெடுக்கப்பட்டமை குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.*

***டிசம்பர் 2022***

*அவர் நடத்திய ஆய்வின் அடிப்படையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு கிராமத்தில் உள்ள குழந்தைகளிடையே போஷக்குக் குறைபாடு அதிகரிப்பு குறித்து ஊடகங்களுக்கு அறிக்கை அளித்ததால், கடந்த மாதம் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட மருத்துவர் சமல் சஞ்சீவ தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவைத் தொடர மீஉயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பிக்கு சம்மேளனத்தின் அழைப்பாளர் வண. கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காண பொலிஸார் தவறியதால், கடுவெல நீதவான் நீதிமன்றத்தினால் 06 டிசம்பர் 2022 அன்று அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், அவருக்கு எதிராக தொடரப்பட்ட மற்றைய வழக்கு தொடர்பாக முதலிகே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். முதலிகேயை காலியில் உள்ள பிரபல்யமான பூஸா சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டாம் என்று கோரி சிறைச்சாலைகள் ஆணையாளரைச் சந்தித்த செயற்பாட்டாளர்கள் குழு ஒன்று வேண்டுகோள் விடுத்தது. இதற்கு முன்னர் பகுதியில் நடைபெற்ற போராட்டமொன்று குறித்து செய்தி சேகரிக்கும் போது, இராணுவத்தினராலும் மற்றும் பொலிஸாராலும் அவர் முகங்கொடுத்த துன்புறுத்தல்கள் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யவதற்காக, ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். முல்லைத்தீவைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பொலிஸ் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிற்கு தேசியக் குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் சாட்சிகளையும் பாதுகாக்கும் அதிகாரசபையின் அறிவுறுத்தலின்படி பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என சட்டமா அதிபர் திணைக்களம் உறுதியளித்துள்ளது. மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனக்குப் பாதுகாப்பை வழங்குவதை வேண்டுமென்றே புறக்கணித்ததாக அபேசேகர குற்றம் சுமத்தினார். அரகலய அரச எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கியமை தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பின் போது நீதவான்களை விமர்சித்த அமைச்சர் சனத் நிஷாந்தவிற்கு எதிரான நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டை முன்வைக்குமாறு சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.*

## *4. ஊடக அடக்குமுறை மற்றும் கருத்துச் சுதந்திரம்*

***ஜனவரி 2022***

*அரசாங்கத்தை அவமதிக்கும் வகையில் சமூக ஊடக உள்ளடக்கத்தை வெளியிட்டதற்காக சமூக ஊடகச் செயலார்வலரும் மற்றும் நடிகருமான சுதத்த திலகசிறி அழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார். ஜனாதிபதியை அவமதிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். யாழ்ப்பாணம், மாங்குளத்தில் உள்ள நீதவான் நீதிமன்றத்தின் பெயர் பலகையைப் புகைப்படம் எடுத்ததற்காக, ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் துன்புறுத்தப்பட்டுள்ளார். லங்காதீப ஊடகவியலாளர் சாந்தனி திஸாநாயக்க, குருநாகல் மாநகர சபையினால் நடத்தப்படும் வாராந்தக் கண்காட்சி குறித்த செய்திகளை வெளியிட்ட போது இடையூறு ஏற்பட்டு, அந்த இடத்தை புகைப்படம் எடுப்பதற்கு முன் அனுமதி பெறுமாறு கோரப்பட்டிருந்தது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் நீதிமன்றத்தில் முன்னிலையான போது ஊடகவியலாளர்கள் கொழும்பு மேல் நீதிமன்ற ட்ரயல் அட் பார் நீதிமன்ற வளாகத்தில் இருக்க அனுமதிக்கப்படவில்லை. கல்வி நிறுவனம் ஒன்று செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், Colombo Today யூடியூப் அலைவரிசைக்கும் மற்றும் யூடியூப் நிறுவனத்துக்கும் உள்ளடக்கத்தை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*



***பெப்ரவரி 2022***

*வண. பிதா சிரில் காமினியினால் முகநூல் பதிவில் செய்யப்பட்ட கருத்தொன்று குறித்து குமார ஜோசப் என்ற குடிமகன் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CID) வரவழைக்கப்பட்டார். முகநூல் பதிவில் வெறுக்கத்தக்க கருத்துக்கள் எதுவும் இல்லை என்ற போதிலும், அவர் 5 மணி நேரத்திற்கும் மேலாக விசாரிக்கப்பட்டார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, தற்போது பிணையில் உள்ள கவிஞர் அஹ்னாப் ஜஸீமின் இல்லத்திற்கு சிவில் உடையில் இராணுவ அலுவலர்கள் சென்றுள்ளனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன் சுதந்திர தினத்தன்று தாம் அறியாத போராட்டமொன்றைச் செய்தியாக்குவதற்கு நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளரும் மற்றும் ஊடக உரிமைச் செயலார்வலருமான செல்வகுமார் நிலாந்தன், இலங்கை பொலிஸின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஊடகவியலாளர் சாமுதித சமரவிக்ரமவின் இல்லத்தின் மீது கல் மற்றும் மலம் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது. IBC தமிழ்*

*இணையதளத்தில் பணிபுரியும் தமிழ் ஊடகவியலாளர் லக்ஷமன் தேவபதீரன் ராஜாங்க அமைச்சர் தலைமையிலான அரசியல் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டார்.*

***மார்ச் 2022***

*சிரேஷ்ட பொலிஸ் அலுவலர்கள் வைத்திருந்ததாகச் சார்த்துரைக்கப்படும் சட்டவிரோதச் சொத்துக்கள் குறித்து அறிக்கையிட்டதற்காக 'அருண' தினசரி மற்றும் வார இறுதி செய்தி ஆசிரியர் சமிந்த சேனாரத்னவுக்கு தொலைபேசி அழைப்பு மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. அரசாங்கத்தை விமர்சித்து அவர் வெளியிட்ட முகநூல் பதிவுகள் காரணமாக, அரசாங்கத்திற்குச் சொந்தமான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் சுதந்திர ஊடகவியலாளரான பரமி நிலேப்தி ரணசிங்க வேலையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். சட்டவிரோத வியாபாரம் ஒன்றின் காட்சிகளை வெளியிட வேண்டாம் எனக் கோரி சுவர்ணவாஹினி செய்தியாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சிக்கு அரசியல்வாதி ஒருவரும் மற்றும் ஊடக உரிமையாளரின் சகோதரர் ஒருவரும் மிரட்டல் விடுத்தனர். வவுனியாவில் வீதி விபத்தொன்று தொடர்பில் செய்தி வெளியிடும் போது ஊடகவியலாளர் இராசையா ஜெயசங்கர் தாக்கப்பட்டார். ஜனாதிபதி தனது முகநூல் பக்கத்தில் கருத்துக்களை வெளியிடுவதற்கு தடை விதித்தார். உள்நாட்டு எரிவாயு விநியோக வரிசையில் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையின் போது, எதிர்க்கட்சி இளைஞர் அணித் தலைவர் கனிஷ்க டீ லனரோல், முகநூல் நேரடி ஒளிபரப்பு செய்வதிலிருந்து பொலிஸாரினரால் நிறுத்தப்பட்டார்.*

***ஏப்ரல் 2022***

*மார்ச் 31 அன்று, ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்திற்கு முன்னால் நடந்த போராட்டம் குறித்து செய்தி சேகரிக்க வந்த குறைந்தது 6 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டனர், அதே வேளை, சுமார் 9 ஊடகவியலாளர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் பொலிஸாராலும் மற்றும் இராணுவத்தினராலும் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதே போராட்டம் தொடர்பாக 'டெய்லி மிரர்' நாளிதழின் புகைப்படக் கலைஞர் வருண வன்னியாராச்சியிடம் பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 4 மணித்தியாலங்களுக்கு மேலாக விசாரணைகளை மேற்கொண்டது. போராட்டத்தின் போது ஏற்பட்ட சேதங்கள் குறித்து செய்தி வெளியிட்ட ஊடகவியலாளர்களை ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் ஒருவர் அச்சுறுத்தியுள்ளார்.*

*பொதுமக்கள் மத்தியில் சீற்றத்தை தூண்டும் எனத் தெரிந்திருந்தும் மிரிஹான போராட்டம் பற்றிய தகவல்களைப் பங்கிடுவதற்கு தனியார் தொலைக்காட்சி அலைவரிசையான சிரச தொலைக்காட்சிக்கு எதிராக விசாரணை நடத்துமாறு 1 ஏப்ரல் 2022 அன்று GP/PA/CID/OUT/76/22 என்ற இலக்கம் கொண்ட கடிதத்தைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CID) பொலிஸ் மா அதிபர் எழுதினார். அரச எதிர்ப்புப் போராட்டம் குறித்து சமூக ஊடகப் பதிவுகள் தொடர்பில் புலனாய்வு அலுவலர்கள் மட்டக்களப்பில் உள்ள எஸ்.நிலாந்தன் மற்றும் பி.சசிகரன் ஆகிய இரு ஊடகவியலாளர்களின் வீடுகளுக்குச் சென்றனர். வடக்கில் தமிழ் அரசியல் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மகாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களைப் பொலிஸார் தடுத்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, TCRCஇன் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில், சமூக ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட்டன, இருப்பினும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) ஆகியன தலையிட்டதை அடுத்து அந்த முடிவு திரும்பப் பெறப்பட்டது.*

***மே 2022***

*4 மே 2022 அன்று பாராளுமன்ற வளாகத்திற்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களில் டிஜிட்டல் ஊடகவியலாளர் புவங்க பெரேராவும் அடங்குவார். 14 மே 2022 அன்று, முல்லைத்தீவைச் சேர்ந்த ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் முள்ளிவாய்க்காலில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வருடாந்த நினைவேந்தல் ஏற்பாடுகளை செய்தியாக்கிக் கொண்டிருந்த போது, இலங்கையின் படைகள் அவரைத் தடுத்ததாகக் கூறப்படுகிறது. 17 மே 2022 அன்று, சுவர்ணவாஹினி ஊடகவியலாளர் பிரகீத் பெரேரா மற்றும் சிரச தொலைக்காட்சி ஊடகவியலாளர் கசுன் சமரவீர ஆகிய இருவரை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் உடல்ரீதியாக தாக்கி, வாய்மொழியாக அச்சுறுத்தி, அவர்களது கையடக்கத் தொலைபேசிகளைப் பலவந்தமாக பறித்துச் சென்றுள்ளனர். Vlogger மற்றும் யூடியூபர் தர்ஷன ஹந்துங்கொட சமூக ஊடகங்களில் அவர் வெளியிட்ட சில வெளிப்படுத்தல்கள் தொடர்பாக 25 மே 2022 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CID) அழைக்கப்பட்டார். அம்பாறை மாவட்டத்தின் கிழக்கு நகரமான அக்கரைப்பற்று, பாலமுனைப் பிரதேசத்தில் பொலிஸாருக்கும் மற்றும் பிரதேசவாசிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் குறித்து 05 மே 2022 அன்று செய்தி சேகரிக்கச் சென்ற கிழக்கின் ஊடகவியலாளர் ஷஹீர் கான் பாரூக் ஒரு குழுவினரால் தாக்கப்பட்டார். 21 மே 2022 அன்று, திருகோணமலை மாவட்டத்தின் கிழக்கு நகரான மூதூரில் உள்ள பெற்றோல் நிலையத்திற்கு வெளியே வரிசையில் நின்றிருந்த மக்கள் கூட்டத்தைப் பதிவு செய்யச் சென்ற சுதந்திர ஊடகவியலாளரான மொஹமட் புஹாரி தாக்குதலுக்கு உள்ளானார். அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை சேர்ந்த பெண் தொலைக்காட்சி தொகுப்பாளரான வசுந்ரா கமகே உட்பட சமூக ஊடகக் குழுவின் மூன்று நிர்வாகிகள் மே 9 அன்று GoGotaGamaஇல் போராட்டக்காரர்கள் மீது அரசாங்க சார்பு கும்பல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து வெடித்த வன்முறைகள் தொடர்பாக CIDஆல் கைது செய்யப்பட்டனர். சுதந்திரமாக இயங்கும் பிரபல ஊடகவியலாளரும், குருநாகல் GotaGoGama போராட்டத் தளத்துடன் தொடர்புடைய பிரபல செயலார்வலருமான புஷ்பா வீரசேகரவும் மற்றும் அவரது கணவரும் 16 மே 2022 அன்று வாரியபொல பொலிஸ் நிலையத்திற்கு "தீயூட்டல் விசாரணை" தொடர்பாக விசாரிப்பதற்காக அழைக்கப்பட்டனர். காலிமுகத்திடல் போராட்டத் தளத்தில் இடம்பெற்ற கும்பல் தாக்குதலை விமர்சித்து முகநூல் பதிவை வெளியிட்டதற்காக இலங்கையின் மத்திய மாகாணத்தின் ஹட்டனைச் சேர்ந்த அரச இளைஞர் சேவை அலுவலர் ஆறுமுகம் பாலசுப்ரமணியம் கைது செய்யப்பட்டார். ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவருக்கு பிணை வழங்கப்பட்டது.*

***ஜூன் 2022***

*அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவரின் வீட்டின் முன்னால் நடைபெற்ற போராட்டம் குறித்து 'டெய்லி மிரர்' நாளிதழில் பணிபுரியும் பெண் ஊடகவியலாளரான ஜமிலா ஹுசைன் செய்தி சேகரிக்கும் போது, போராட்டக்காரர்களால் வாய்மொழியாக அச்சுறுத்தப்பட்டார். எரிபொருள் வரிசையின் நிலைமை குறித்து செய்தி சேகரிக்கச் சென்றபோது கிழக்கின் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் தாக்கப்பட்டார். 7 ஜூன் 2022 அன்று ஊடகவியலாளர் குமணன் கணவதிப்பிள்ளை முல்லைத்தீவில் கடற்படை முகாமின் நில விஸ்தரிப்புப் போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற போது பாதுகாப்பு அலுவலர்களால் இடையூறு செய்யப்பட்டார். 10 மாதங்களுக்கு முன்னர் இலங்கை விமானப்படையின் புலனாய்வுப் பிரிவினரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில், ஊடகவியலாளரும், GoGotaGama செயலார்வலருமான தரிந்து உடுவரகெதர, இலங்கைப் பொலிஸின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சிஐடி) அழைக்கப்பட்டு, அவரது யூடியூப் அலைவரிசையின் உள்ளடக்கம் குறித்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.*

***ஜூலை 2022***

*ஜூலை 22 அன்று அதிகாலையில் ஆர்ப்பாட்டக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி செயலகத்தினதும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியினதும் மீது திடீர்வேட்டையை இராணுவத்தினர் நடத்தி, அவற்றைப் பொறுப்பெடுத்தனர். இராணுவத் திடீர்வேட்டையை செய்தியாக்குவதற்கு அங்கு காணப்பட்ட குறைந்தது ஐந்து ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர், சிலர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர், அவர்களது தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன மற்றும் அவர்கள் பதிவு செய்த காணொளிகள் இராணுவத்தால் வலுக்கட்டாயமாக நீக்கப்பட்டன. சிவில் உடையில் இருந்த நபர்கள், தங்களை பொலிஸ்காரர்கள் என்று கூறிக்கொண்டு, Xposure News அலுவலகத்திற்குச் சென்று, புகைப்படங்களில் உள்ள நபர்களை அடையாளம் காணவும், CCTV காட்சிகளைப் பார்க்கவும் பாதுகாப்புக் காவலரிடம் கோரியதுடன், சுமார் ஒரு மணி நேரம் நுழைவாயிலைக் கண்காணித்தனர். 09 ஜூலை 2022 அன்று பிரதமரின் தனிப்பட்ட இல்லத்தில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை நேரலையில் ஒளிபரப்பிக்கொண்டிருந்த Sirasa TV NewsFirstஐச் சேர்ந்த 8 ஊடகவியலாளர்கள் இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தெரண தொலைக்காட்சியில் செய்தி வெளியிட்ட மற்றுமொரு ஊடகவியலாளரான பிரதீப் சஞ்சீவ விக்ரமசிங்க மூச்சுத்திணறல் அடைந்ததுடன், கண்ணீர் புகைத் தாக்குதல்களை எதிர்கொண்ட பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பதுளை மாவட்டத்தில் உள்ள ஏ.எம்.குமார அத்தரகே என்ற பெயரிலான ஆசிரியர், அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவாக வெளியிடப்பட்ட முகநூல் பதிவின் காரணமாக பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.*

***ஓகஸ்ட் 2022***

*பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்னர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட கவிஞர் அஹ்னாப் ஜஸீம், ஓகஸ்ட் 1 அன்று பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட பட்டியலில் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்காகக் குறித்தொதுக்கப்பட்ட நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

***செப்ரெம்பர் 2022***

*புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலகத்தில் இடம்பெற்ற எரிபொருள் மோசடி தொடர்பில் அவர் அறிக்கையிட்டமை தொடர்பில் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக தமிழ் சிரேஷ்ட ஊடகவியலாளர் சண்முகன் தவசீலனை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மாங்குளம் பொலிஸார் அழைத்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளர் செல்வகுமார் நிலாந்தன், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டக்களப்பு அரசியல் தலைவருடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறி, கொழும்பில் உள்ள பயங்கரவாத எதிர்ப்புப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டார். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் பாலசிங்கம் கிருஷ்ணகுமாரை கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையகத்தில் முன்னிலையாகுமாறு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர்கள் அழைப்பாணை அறிக்கை ஒன்றைக் கையளித்தனர். நாட்டின் பொருளாதார நெருக்கடியால் சில பாடசாலை மாணவர்கள் உணவுப் பற்றாக்குறையால் மயக்கமடைந்ததாக சில அலுவலர்கள் கூறியதை அடுத்து, சமூக ஊடகங்களில் தங்கள் கருத்துக்களைப் பகிர்வதைத் தவிர்க்குமாறு அரசு ஊழியர்களுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. சுதந்திர எழுத்தாளர் துலானி பிரியதர்ஷினி, கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்கள (சிஐடி) தலைமையகத்திற்கு வரவழைக்கப்பட்டு, போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டமை குறித்து சுமார் 5 மணித்தியாலங்கள் அவ்வரிடம் விசாரணை நடத்தப்பட்டது.*

***ஒக்ரோபர் 2022***

*அண்மையில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் போது, இரு பொலிஸ் அலுவலர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக முறைப்பாடு செய்ய முற்பட்ட போது, கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (OIC) தன்னை அச்சுறுத்தியதாக இதழியலாளர் தரிந்து ஜயவர்தன குற்றஞ்சாட்டினார்.*

***நொவம்பர் 2022***

*ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன மற்றும் தரிந்து உடுவரகெதர ஆகியோர் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவு தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளரான புலம்பெயர்ந்த ஊடகவியலாளர் எஸ்.நிலாந்தனின் இல்லத்திற்கு சிவில் உடையில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சென்றுள்ளனர். மற்றுமொரு சந்தர்ப்பத்தில், முல்லைத்தீவு பத்திரிகையாளர் ஒன்றிய அலிவலகத்திற்குச் சென்ற இராணுவ வீரர்கள், முல்லைத்தீவு பத்திரிகையாளர் ஒன்றியத்தின் ஊடக நிலையத்துடன் தொடர்புடைய முக்கிய நபர்கள் குறித்த தகவல்களை வழங்குமாறு கோரி ஊடகவியலாளர் குமணனிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் குறித்து இலங்கை ஊடகங்கள் எதிர்மறையான செய்திகளையும் மற்றும் புகைப்படங்களையும் வெளியிட்டு, நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாக பாராளுமன்ற விவாதமொன்றில் கலந்து கொண்ட ஊடகத்துறை அமைச்சர் குற்றம் சுமத்தினார். தேயிலைத் தோட்ட நிர்வாகத்தினருக்கும் மற்றும் பிரதேசவாசிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் குறித்து பிரதேச ஊடகவியலாளர் சாம்பசிவம் சதீஸ்குமார் அறிக்கையிட்டுக் கொண்டிருந்த போது, கிர்கோஸ்வால்ட் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தினரும் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட அத்தியட்சகரும் அவரை அச்சுறுத்தியுள்ளனர்.*

*ஹம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேசத்தில் குழந்தைகளின் போஷாக்கு குறைபாடு குறித்து வெளிப்படுத்தியதையடுத்து வைத்தியரும் மற்றும் தொழிற்சங்கவாதியுமான சமல் சஞ்சீவ பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். ஊடகங்களுக்கு தவறான தகவல்களை வழங்கியமை மற்றும் ஊடகங்களுடன் பேசுவதற்கு முன்னர் சுகாதார அமைச்சின் அனுமதியைப் பெறவில்லை என்பதுமே அவர் குற்றஞ்சாட்டப்பட்டதற்கான காரணம் என சுகாதார அமைச்சு அவருக்குத் தெரிவித்துள்ளது.*

***டிசம்பர் 2022***

*டிசம்பர் 18 அன்று, தொழிலதிபர் தினேஷ் ஷாஃப்டரின் கொலை குறித்த விசாரணை தொடர்பாக, 'யூடியூபரும்' மற்றும் ஊடகவியலாளருமான சாமுதித சமரவிக்ரம, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டார், அவர் முன்னர் கைது செய்யப்பட்டு PTAஇன் கீழ் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த புலனாய்வு ஊடகவியலாளரும் மற்றும் பாதுகாப்பு ஆய்வாளருமான கீர்த்தி ரத்நாயக்கவுடன் கலந்துரையாடியதுடன், அவரது YouTube அலைவரிசையில் பேட்டியையும் வெளியிட்டிருந்தார்.*

## *5. ஒன்று கூடும் சுதந்திரத்தின் அடக்குமுறை*

***ஜனவரி 2022***

*இரு பொதுப் பேரணிகளில் அதன் தலைவர் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோர் மீது கண்காணிப்பு, அச்சுறுத்தல், முட்டைத் தாக்குதல்கள் உட்பட பல துன்புறுத்தல்களுக்கு ஓர் இடதுசாரி அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) மற்றும் அதன் உறுப்பினர்கள் உள்ளாகினர். 1987இல் இடம்பெற்ற படுகொலையில் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வைப் பொலிஸார் தடுத்துள்ளனர். சில தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்றும், அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் நீதியமைச்சர் தெரிவித்தார்.*

***பெப்ரவரி 2022***

*தொழிற்சங்கச் செயலார்வலர்களை மக்கள் தாக்க வேண்டும் என்ற சர்ச்சைக்குரிய கருத்தொன்றை அமைச்சர் திஸ்ஸ குட்டியாராச்சி வெளியிட்டார். கிளிநொச்சியில் மாவட்டக் கடற்றொழில் ஒற்றுமை (DIFSO) எனப் பெயரிடப்பட்ட அரச சார்பற்ற அமைப்பொன்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டிருந்த போது, பொலிஸார் சோதனையிட்டனர். மின்சாரம் மற்றும் சுகாதாரம் ஆகிய சேவைகளை அத்தியாவசியச் சேவைகளாக ஜனாதிபதி அறிவித்தார். தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுக்கவும் அத்துடன் கட்டுப்படுத்தவும் ஒரு நடவடிக்கையாக வரலாற்றுரீதியாக அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தாதியர் தொழிற்சங்கத்திற்கும் மற்றும் அதன் தலைவருக்கும் எதிராக அவர்கள் திட்டமிட்டிருந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு சற்று முன்னதாக நீதிமன்றம் இரு தடை உத்தரவுகளைப் பிறப்பித்தது. கடந்த ஆண்டு மே 18 அன்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட பங்கேற்பாளர்களின் விபரங்களைப் பெறுவதற்காக பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்கு (TID) ஒரு செயலார்வலர் அழைக்கப்பட்டிருந்தார். அப்பகுதியில் கிரானைட் கற்கள் வெட்டியதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து கிராம மக்கள் நடத்திய போராட்டத்திற்கு எதிராக கற்சுரங்க நிறுவன ஊழியர்கள் எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தினர். கண்டியில் இலங்கைத் தொழிலாளர் செங்கொடிச் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் கலைத்தனர்.*

***மார்ச் 2022***

*ஜே.வி.பி. மற்றும் அதன் கூட்டணிக் கட்சியான என்.பி.பி. ஆகியன ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்திற்கு இடையூறு விளைவிப்பதற்காக ஆளும் அரசாங்க அரசியல்வாதிகளுடனும் மற்றும் முன்னாள் இராணுவத்தினருடனும் தொடர்புள்ள அவன்ட் கார்ட் என்ற சர்ச்சைக்குரிய பாதுகாப்பு நிறுவனம் குண்டர்களை கேள்வுக்கு எடுப்பதில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சி அரசியல் கட்சியான ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியது. பிரதமரின் யாழ்ப்பாணம் விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்த போராட்டத்திற்கு பொலிஸார் தடை விதித்தனர். இதே போராட்டத்தில் கலந்து கொண்ட இரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைப் பின்னர் பொலிஸார் வரவழைத்து, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டது குறித்து விசாரணை நடத்தினர். யாழ்ப்பாணத்தில் சர்வதேச மகளிர் தினப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் மற்றும் ஏற்பாட்டாளர்களையும் பொலிஸார் அச்சுறுத்தியுள்ளனர். கொழும்பு புறநகரில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்ட போது, பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதுடன், ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்தனர்.*

***ஏப்ரல் 2022***

*சீருடை அணிந்து அரச எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர் ஒருவரை பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்தனர்.*

*நாடளாவியரீதியில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த வேளையில், பொது இடங்களில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தடைசெய்து அரசாங்கம் வர்த்தமானி உத்தரவை வெளியிட்டது. பிடியாணை இன்றி தனிநபர்களைக் கைது செய்து, தடுத்து வைப்பதை அனுமதிப்பதுடன், இராணுவத்திற்கும் மற்றும் பொலிஸூக்கும் அதிக அதிகாரங்களை வழங்கும் பொது அவசரகால நிலையையும் ஜனாதிபதி பிரகடனப்படுத்தினார். பல போராட்டங்களில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். கொழும்பில் ஜனாதிபதியின் தனிப்பட்ட வாசஸ்தலத்திற்கு முன்பாக நடைபெற்ற ஒரு போராட்டம், தங்காலையில் உள்ள பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு முன்பாக நடைபெற்ற ஒரு போராட்டம், பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு முன்பாக IUSF[15] ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு போராட்டம், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு போராட்டம், ரம்புக்கனவில் பிரதேசவாசிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு போராட்டம், களுத்துறையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகத்திற்கு முன்பாக நடைபெற்ற ஒரு போராட்டம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல போராட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும். ரம்புக்கன போராட்டத்தில் போராட்டக்காரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர், அதேவேளை, எரிபொருள் தாங்கியைப் போராட்டக்காரர்கள் சுட முயற்சித்ததாகப் பொலிஸார் குற்றஞ்சாட்டினர். அரசுக்கு எதிராகப் போராட்டக்காரர்கள் நடத்திய மெழுகுவர்த்தி ஒளியில் விழித்திருத்தல் போராட்டத்திற்கு அரசு சார்பு போராட்டக்காரர்கள் இடையூறு செய்ய முயன்றனர். கொழும்பில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு முன்பாக நடத்தப்பட்ட போராட்டத்திற்கு எதிராகப் பொலிஸார் நீதிமன்ற உத்தரவொன்றைக் கோரினர். கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்திற்கு எதிராக நீதிமன்ற உத்தரவைப் பொலிஸார் கோரினர். எனினும், அந்தக் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. பதுளை மாவட்டத்தின் ரிதிமாலியத்தவில், போராட்டக்காரர் ஒருவரை உள்ளூராட்சி மன்றத் தலைவர் தாக்கியதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட, தாக்கப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் புகைப்படங்கள் அடங்கிய பதாகைகள் ஜனாதிபதி செயலக அலுவலர்களால் அகற்றப்பட்டன. அலரிமாளிகை முன்பாக போராட்டக்காரர் ஒருவரைப் பொலிஸார் தாக்கினர். #GoHomeGota2022 முகநூல் குழுவில் ஈடுபட்டிருந்த ஒரு சமூக ஊடகச் செயலார்வலர் கடத்தப்பட்டதுடன், பின்னர் பொலிஸாரினால் கைது செய்யப்படுவதற்காக அழைக்கப்பட்டார். அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்ததற்காக அரசு நிறுவனத்தில் பணிபுரியும் முன்னாள் விளையாட்டு வீரர் ஒருவர் வாய்மொழி மிரட்டல்களைப் பெற்றார். நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் போராட்டங்களில் கலந்து கொள்ள தடை விதித்து, நீதிமன்ற உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டது. இந்திய அமைதி காக்கும் படையினரின் அட்டூழியங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து 1988இல் உண்ணாவிரதப் போராட்டத்தில் உயிரிழந்த அன்னை பூபதியின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வுக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. எரிபொருள் உயர்வைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட பஸ் சாரதி ஒருவரை பொலிஸ் உயர் அலுவலர் தாக்கினார்.*

***மே 2022***

[15] *பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம்*

*9 மே 2022 அன்று, அலரிமாளிகையில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்சவை சந்தித்ததைத் தொடர்ந்து, ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) ஆதரவாளர்கள், அலரிமாளிகையில் அமைதியான அரசாங்க எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். பின்னர் காலி முகத்திடலில், ஜனாதிபதி செயலகத்திற்கும் மற்றும் அப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கும் செல்வதற்கு இடையூறாக உள்ளதாக கூறி போராட்டக்காரர்கள் கட்டியிருந்த கொட்டில்களை அகற்றுவதற்கு அவசர உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர். மற்றொரு ஆர்ப்பாட்டக்காரரான கிழக்கு மாகாணத்தில் உள்ள கந்தளாய் மகாவலி புர வித்தியாலயத்தின் நூலக உதவியாளர் சுசந்த ரம்புக்வெல்ல 16 மே 2022 அன்று கந்தளாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் உள்ள லங்கா நாய்கை (பிரைவேட்) லிமிடெட்டில் பணிபுரியும் பிரபோத லக்ஷனை போராட்டங்களில் பங்கேற்றதற்காக பொலிஸார் 13 மே 2022 இரவு வேளை கைது செய்தனர். 19 மே 2022 அன்று, பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் சம்மேளனம் [Inter-University Student Federation (IUSF)] ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தில் போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்புகைக்குண்டை வீசினர் மற்றும் தண்ணீரைப் பீச்சியடித்தனர். கோட்டைப் பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய, கொழும்பு கோட்டையில் உள்ள சில வீதிகளுக்கும், அரச நிறுவனங்களுக்கும் பிரவேசிக்கவோ அல்லது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதற்கோ அத்துடன் இடையூறு விளைவிப்பதற்கோ தடை விதித்து, உயர் தேசிய டிப்ளோமா (HND) மாணவர்களினாலான ஓர் எதிர்ப்பு ஊர்வலத்திற்கு கொழும்புக் கோட்டை நீதவான் உத்தரவொன்றைப் பிறப்பித்தார். நீதிமன்ற உத்தரவை மீறி, மே 21 அன்று போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டதால், பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டையும் மற்றும் தண்ணீர் பீரங்கிகளையும் பயன்படுத்தினர். 29 மே 2022 அன்று, கொழும்பில் மருத்துவப் பீட மாணவர் செயலார்வலர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மற்றொரு போராட்டத்தைக் கலைக்க கலகத் தடுப்புப் பொலிஸார் கண்ணீர் புகையையும் மற்றும் தண்ணீர் பீரங்கிகளையும் பயன்படுத்தினர். 9 மே அன்று, அரசாங்க சார்புக் கும்பல் தாக்குதலின் போது காயமடைந்தவர்கள் உட்பட நேரடி சாட்சிகள் என ஏழு பேர் மேலதிக விசாரணைகளுக்காக இலங்கையில் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்ற சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க, 12 மே 2022 அன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் அவர்களுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டது. மே 9 அன்று போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் செயலார்வலரும் மற்றும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவருமான இந்திக்க கமகே மாத்தளை பொலிஸாரால் 27 மே 2022 அன்று கைது செய்யப்பட்டார். 26 மே 2022 அன்று வீரகெட்டிய பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்ட தெவலேகம பிரேமரத்தன தேரரிடம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பெற்றோரின் புதைகுழி அழிக்கப்பட்டமை மற்றும் 9 மே 2022இல் இடம்பெற்ற பல சம்பவங்கள் ஆகியன தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட சுற்றுச்சூழல் செயலார்வலர்களான நுவன் நீலமுனி மற்றும் ஹர்ஷன நீலமுனி ஆகியோர் 26 மே 2022 அன்று அம்பலாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அலரி மாளிகைக்கு எதிரே போராட்டம் நடத்திய போராட்டக்காரர்களிடமும் சகல கட்டமைப்புகள், வாகனங்கள் மற்றும் உடைமைகள் ஆகியவற்றை அகற்றுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் 4 மே 2022 அன்று உத்தரவு பிறப்பித்தது. குருநாகல் மாவட்டத்தின் பன்னலையைச் சேர்ந்த சமன் குமார ரந்திலக்க என்ற இளைஞர் மற்றுமொரு நபருடன் கம்பஹா மாவட்டத்தில் யக்கல பொலிஸாரால் 1 மே 2022 அன்று கைது செய்யப்பட்டார். இந்த இருவரும் அரசுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு செய்தியாளர்களிடம் பேசியதற்காக கைது செய்யப்பட்டனர். "ரட்டா" என்ற 'யூடியூபர்' ரதிது சேனாரத்ன, மே 30 அன்று கொம்பனித்தெரு பொலிஸாரினரால் கைது செய்யப்பட்டார். தான் பங்கேற்ற போராட்டத்திற்கு எதிராக வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் பேரில் ரட்டா கைது செய்யப்பட்டார். கொழும்பில் தெமட்டகொடைப் பகுதியில் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவினர் மீது உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் தலைமையிலான கும்பல் தாக்குதல் நடத்தியது. இந்தச் சம்பவத்தை முகநூலில் நேரலையாகப் பகிர்ந்த நபரும் தாக்கப்பட்டார். மே 16 அன்று, குருநாகல் முதல்வரால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய குருநாகல் GotaGoGama எதிர்ப்பு இயக்கத்தில் தீவிரமாக*

*பங்குகொண்ட இளைஞர் செயலார்வலரான வாரியபொலவை சேர்ந்த அமில மென்டிஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டார்.*

***ஜூன் 2022***

*காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டுள்ள அமைதியான போராட்டத் தளத்தை அகற்ற வேண்டாம் என அலுவலர்களுக்கு உத்தரவிடக் கோரிய அடிப்படை மனுவை மீஉயர் நீதிமன்றம் நிராகரித்தது. கடந்த ஜூனில், கொழும்புக் கோட்டை மற்றும் தலங்கம ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற போராட்டங்களில் கலந்து கொண்ட முக்கியமான 9 செயலார்வலர்களைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கோட்டை நீதவான் உத்தரவிட்டார். 15 ஜூன் 2022 அன்று, இந்து ஆலயம் ஒன்றின் காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்ட போது, முன்னாள் தமிழ் கிளர்ச்சியாளரும் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த செயலார்வலருமான வேலுப்பிள்ளை மாதவமேஜர் இராணுவத்தினரால் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டார். எரிபொருளைக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது, கைது செய்யப்பட்ட போராட்டக்காரர் ஒருவருக்கு, மாத்தறை நீதவான் நீதிமன்றினால் மூன்றரை வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பொலிஸின் முச்சக்கர வண்டியைச் சேதப்படுத்தியதாகவும் அத்துடன் பொலிஸின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. 02 ஜூன் 2022 அன்று, விகாரமஹாதேவி பூங்காவில் இருந்து கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரை பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிக்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்தது. 20 ஜூன் 2022 அன்று, சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர்களுடன் திட்டமிடப்பட்ட கூட்டம் இருந்த போது, கொழும்பில் உள்ள நிதியமைச்சினதும் மற்றும் ஜனாதிபதி செயலகத்தினதும் நுழைவாயில்களை அடைத்து மறியல் செய்த 21 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். 09 ஜூன் 2022 அன்று பொலிஸ் தலைமையகம் அருகே போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டையும் மற்றும் தண்ணீரையும் பிரயோகித்தனர். 2013இன் 31ஆம் இலக்க மின்சாரச் சட்டம் குறித்து அண்மையில் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு எதிராக நாடளாவியரீதியில் வேலைநிறுத்தம் ஒன்றை இலங்கை மின்சார சபைப் பொறியியலாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த அதே வேளை, சில மின் உற்பத்தி நிலையத் திட்டங்களை போட்டி ஏல முறையின்றி நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதியளிக்கும் வகையில், மின்சாரத்தை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானியை ஜனாதிபதி வெளியிட்டார். 04 ஜூன் 2022 அன்று, அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக்காரர் குழுவினால் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவைப் பதவி விலகுமாறு கோரி, வழக்கறிஞர்கள் குழுவினால் 30 ஜூன் 2022 அன்று காலி கோட்டை பாதுகாப்பு அரண்களில் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு இராணுவ அலுவலர்கள் இடையூறு செய்தனர். இந்தப் போராட்டம் அருகில் உள்ள மைதானத்தில் நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியின் துடுப்பாட்டக்காரர்களின் பார்வைக்கு இடையூறாக இருந்ததாக இராணுவம் கூறியது. முல்லைத்தீவு குருந்தூர்மலையில் உள்ள இந்து ஆலயத்திற்குச் சொந்தமான காணி அபகரிப்புக்கு எதிராக 12 ஜூன் 2022 அன்று போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த மூவர் இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.*

*மற்றுமொரு சம்பவத்தில், 07 ஜூன் 2022 அன்று தற்போது முல்லைத்தீவில் உள்ள கோட்டாபய கடற்படைத் தளத்தை விஸ்தரிப்பதற்காக, காணியை அபகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் அச்சுறுத்தியதாகக் கூறப்படுகிறது. சில போராட்டக்காரர்களை வன்முறையில் ஈடுபட ஊக்குவித்ததாகச் சார்த்துரைக்கப்படுகின்ற குற்றச்சாட்டிற்காக, மக்கள் வழக்கறிஞர் சங்கத்தின் கூட்டுநரும், GotaGoGama செயலார்வலருமான சட்டத்தரணி சேனக பெரேரா, 06 ஜூன் 2022 அன்று CIDக்கு அழைக்கப்பட்டார். செயலார்வலர் சந்திரலால் அபேகுணவர்தன, மே 9 அன்று போராட்டக்காரர்கள் மீதான மிருகத்தனமான தாக்குதலைக் கண்டித்து முன்னர் பதிவிட்ட முகநூல் பதிவின் பேரில், 06 ஜூன் 2022 அன்று காலி பொலிஸ் நிலையத்தின் CID பிரிவுக்கு அழைக்கப்பட்டார். குருநாகலில், தங்கியிருந்து*

*போராட்டம் நடத்தும் தளமான GotaGoGamaஇன் செயலார்வலர்களான அதீப ஏகநாயக்க மற்றும் பிரின்ஸ் ஜயசூரிய ஆகியோர் 7 ஜூன் 2022 அன்று குருநாகலிலுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் (DIG) அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டனர். 20 ஜூன் அன்று, மாணவர் செயலார்வலர்கள் மற்றும் பலர் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தில், GotaGoGamaஇன் முக்கிய செயலார்வலரான அமல் சாலிந்த கலந்து கொண்டுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளையில், கைது செய்யப்பட்டார். கடந்த மே 9 அன்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின் பின்னணியில், ஒருவரின் வீட்டுக்கும் மற்றும் அரசியல்வாதியொருவரின் வதிவிடமென்றுக்கும் தீ வைத்து தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில், பேராசிரியர் நெதலகமுவ தம்மதின்ன தேரர் கம்பஹா பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.[16] கொழும்பில் உள்ள முன்னிலை சோஷலிஸக் கட்சியின் அலுவலகத்தை பொலிஸார் முற்றுகையிட முற்பட்டுள்ளனர்.*

***ஜூலை 2022***

*ஜனாதிபதியைப் பதவி விலகக் கோரி மதத் தலைவர்கள் குழுவொன்று 7 ஜூலை 2022 அன்று நடத்திய போராட்டத்திற்கு எதிராக, கோட்டைப் பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்றனர். 06 ஜூலை 2022 அன்று, கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக, போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமச்சந்திர மற்றும் 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.*

*ஜூலை 8 அன்று இரவு 9 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தைப் பொலிஸ் அமுல்படுத்தியது. இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள கடிதத்தில், மக்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொலிஸ் மா அதிபருக்கு அதிகாரம் இல்லை என தெரிவித்துள்ளது.*

*ஜூலை 9 அன்று, ஜனாதிபதியைப் பதவி விலகக் கோரி அரசாங்கத்தின் முக்கிய கட்டிடங்களைப் போராட்டக்காரர்கள் கையகப்படுத்தினர். ஜூலை 21 அன்று, ஜனாதிபதி செயலக வளாகத்தை அலுவலர்களிடம் ஒப்படைக்கத் தயார் என போராட்டக்காரர்கள் பகிரங்கமாக அறிவித்தனர். கட்டிடம் கையளிக்க அனைத்தும் தயாராக இருந்த நிலையில், ஜனாதிபதி செயலகத்தை ஆக்கிரமித்து உறங்கிக் கொண்டிருந்ததும் மற்றும் வீதியோரங்களில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகைகளில் இருந்ததுமான போராட்டக்காரர்கள் ஏதேனும் முன் எச்சரிக்கையின்றி 22 ஜூலை 2022 அன்று அதிகாலை இராணுவத்தினரால் பொல்லுகளால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததுடன், ஒரு வழக்கறிஞர் மற்றும் ஒரு சில பத்திரிகையாளர்கள் உட்பட குறைந்தது 9 பேர் கைது செய்யப்பட்டனர். ஆக்கிரமிப்புப் போராட்டத் தளத்திற்குள் அமைந்துள்ள எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க சிலைக்கு 50 மீற்றர் சுற்றளவில் போராட்டக்காரர்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்கும் உத்தரவொன்றைக் கொழும்பு கோட்டை நீதவான் பிறப்பித்தார்.*

*31 ஜூலை 2022 அன்று, களனி பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடத்தின் மாணவர் செயலார்வலரும் மற்றும் இளங்கலை மாணவருமான ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார். நன்கு அறியப்பட்ட மாணவர் தலைவர்கள் பற்றி விசாரிக்கப்பட்ட பின்னர், அவர் வீதியோரமொன்றில் விடப்பட்டார். மாணவர் செயலார்வலர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்திற்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி கொழும்பு கறுவாத்தோட்டப் பொலிஸார் நீதிமன்றத்திற்கு நாடிய நிலையில், அதனை நீதிமன்றம் நிராகரித்தது.*

[16] *கொழும்பில் பிரதான ஆக்கிரமிப்பு போராட்டத் தளத்தில் அரசாங்க ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்கும் வகையில் அரசியல்வாதிகளின் சொத்துக்கள் மீது ஆத்திரமடைந்த கும்பல் தாக்குதல் நடத்தியதால், ஆளும் அரசியல்வாதிகளுக்கு சொந்தமான ஏராளமான சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன என்பதுடன், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.*

*ஜூலை 25 அன்று, காலி முகத்திடலில் போராட்டத்தில் சம்பந்தப்பட்டிருந்த ஆறு முக்கிய செயலார்வலர்களுக்கு எதிராகப் பயணத் தடை விதிக்கப்பட்டது. ஜூலை 28 அன்று, காலி முகத்திடல் போராட்டத் தளத்தில் சம்பந்தப்பட்டிருந்த 21 போராட்டக்காரர்களுக்கு எதிராக மற்றொரு பயணத் தடை விதிக்கப்பட்டது. #GotaGoHome 'ஹேஷ்டேக்கை' (hashtag) அறிமுகப்படுத்தியதாகக் கூறப்படும் சமூக ஊடகச் செயலார்வலரான பத்தும் கெர்னர் 28 ஜூலை 2022 அன்று பாராளுமன்றத்திற்கு முன்னால் நடந்த போராட்டத்திற்கு போராட்டக்காரர்களைக் கூட்டியதாகக் கூறி கைது செய்யப்பட்டார். 27 ஜூலை 2022 அன்று, கொழும்பில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டத் தளத்தில் முக்கியப் பிரமுகராக விளங்கிய அமில ஜீவந்த பீரிஸைத் தேடி இரத்னபுரியில் உள்ள தேவாலயத்தில் ஒரு சிறப்பு பொலிஸ் குழாம் சோதனை நடத்தியது. GotaGoGama ஆர்ப்பாட்டத்தில் முன்னணியில் இருந்த இரு முக்கிய அரசாங்க எதிர்ப்புப் போராட்டத் தலைவர்களான லாஹிரு வீரசேகர மற்றும் தெம்பிட்டியே சுகதானந்த தேரர் ஆகியோருக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. 22 ஜூலை 2022 அன்று மாலை தாமரை வீதியூடாக காலி முகத்திடலை நோக்கிப் பேரணியாகச் செல்ல முற்பட்ட போராட்டக்காரர்கள் இலங்கைக் கடற்படையினரால் தடுக்கப்பட்டதுடன், அவர்கள் மீது கடற்படை வீரர்கள் பொல்லுகளால் தாக்க முயற்சிப்பதை காணொளிக் காட்சிகள் காட்டின. ஜூலை 28 அன்று, இஸ்மத் மௌலவி என்ற பெயரிலான போராட்டக்காரர் காலி முகத்திடலில் வைத்து கைது செய்யப்பட்டார். 21 ஜூலை 2022 அன்று, எம்பிலிப்பிட்டியவில் அமைந்துள்ள அரச எதிர்ப்புப் போராட்டத் தளத்தைக் குண்டர்கள் தாக்கி அழித்தனர். 9 ஜூலை 2022 அன்று, ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் பிரவேசித்த போது, ஜனாதிபதி இல்லத்தில் காணப்பட்ட பணத்தை எண்ணி அலுவலர்களிடம் ஒப்படைத்த நால்வரைப் பொலிஸார் கைது செய்தனர். 09 ஜூலை 2022 அன்று, ஜனாதிபதியின் கொடியைத் திருடியதாகக் கூறி, ஜூலை 29 அன்று, சமகி சேவக சங்கமயவின் முன்னாள் துறைமுகத் தொழிற்சங்கத் துணைத் தலைவர் உதேனி களுதந்திரியை பொலிஸார் கைது செய்தனர். ஜூலை 22 அன்று, இராணுவத் தாக்குதலின் போது, சஹன் ரஞ்ஜக்க வீரவர்தன என்ற இளம் சமூக ஊடகச் செயலார்வலர் இலங்கை விமானப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு, தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் இதழியலாளரும், மாணவர் செயலார்வலருமான வெரங்க புஷ்பிகா கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு பஸ் ஒன்றில் திரும்பிக் கொண்டிருந்த போது, பொலிஸாரால் கடத்தப்பட்டார். ஜூலை 29 அன்று, முன்னிலை சோஷலிஸக் கட்சியின் அலுவலகத்தில் பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டனர்.*

***ஓகஸ்ட் 2022***

*"கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்குள் ஜூலை 09 அன்று பலவந்தமாகப் பிரவேசித்து அதன் சொத்துக்களைச் சேதப்படுத்தியதாகக்" கூறப்படும் 72 ஆர்ப்பாட்டக்காரர்களை அடையாளங்காண பொதுமக்களின் உதவியைக் கோரி பொலிஸார் ஒரு பத்திரிகை வெளியீட்டினை விடுத்திருந்தனர். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுடன் தொடர்புடைய "போராட்டத்திற்கான தேசிய நிலையம்" என்ற அமைப்பின் ஊடக ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட ஊடகவியலாளர் மஞ்சுள சமரசேகர, பொலிஸார் தம்மை கைது செய்ய முயல்வதற்கான தெளிவான அறிகுறி இருப்பதாகக் குற்றம் சுமத்தினார். 'யூடியூபர்' ரதிந்து சேனாரத்ன (ரட்டா) மற்றும் உயர் தேசிய டிப்ளோமா மாணவர் சம்மேளனத்தின் கூட்டுநர் ஹரித தர்ஷனா ஆகியோர் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இலங்கையின் சமூக-பொருளாதார நெருக்கடி தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வுகாணுமாறு கோரியும், அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரியும் ஓகஸ்ட் 18 அன்று கொழும்பில் நடைபெற்ற போராட்டத்தின் போது, 19 போராட்டக்காரர்கள் இலஙகைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாணவர் செயலார்வலர்கள் உட்பட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கைதிகளை விடுவிக்கக் கோரி பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் (IUSF) கொழும்பில் மற்றுமொரு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. கண்ணீர் புகையினாலும் மற்றும் தண்ணீர் பீரங்கிகளாலும் தாக்கப்பட்டு, 27 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். உயர் தேசிய டிப்ளோமா மாணவர் சம்மேளனத்தின்*

*கூட்டுநர் ஹரித தர்ஷனவின் வீட்டிற்குச் சென்ற பொலிஸார், வாக்குமூலத்தைப் பதிவுசெய்வதற்காக பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு அவருக்குக் கூறினர். கொழும்பில் உள்ள இலங்கை ஆசிரியர் சங்க அலுவலகத்திற்கு நான்கு பொலிஸார் சென்று, பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினைத் தேடியதுடன், அவரது இரவு நடைமுறையொழுங்கு குறித்தும் விசாரித்தனர். முன்னைய மாதம் ஸ்டாலின் நடத்திய போராட்டம் தொடர்பாக முகத்துவாரம் பொலிஸ் நிலையத்திற்கு அவர் வரவழைக்கப்பட்டார். இதே போராட்டம் தொடர்பாக தொழிலாளர் போராட்டத்தின் அமைப்புச் செயலாளர் துமிந்த நக்மெளவ துறைமுகப் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டார். 18 ஓகஸ்ட் 2022 அன்று, அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் (IUSF) ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பும் போது சிவில் சமூகச் செயலார்வலர் சிந்தக ராஜபக்ச கைது செய்யப்பட்டார். ஜூலை 9 அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஓர் இளம் போராட்டக்காரர் கொழும்பு குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டார். அண்மையில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட நான்கு இளைஞர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் இருந்து 22 ஓகஸ்ட் 2022 அன்று அழைப்பாணை அறிவித்தலைப் பெற்றனர். சோஷலிஸ மாணவர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் ரங்கன லக்மால் தேவப்பிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அண்மைய ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இளம் கலைஞரான ஷாலிக ருக்ஷான் சேனாதீர, 23 ஓகஸ்ட் 2022 அன்று கொழும்பு வொக்ஸ்ஹால் வீதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட இரு இளைஞர்களான பியத் நிகேஷலா மற்றும் நுவான் நீலமுனி ஆகியோர் 22 ஓகஸ்ட் 2022 அன்று கொழும்பில் உள்ள பொலிஸின் குற்றப் புலனாய்வுத் தலைமையகத்திற்கும் மற்றும் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திற்கும் அழைக்கப்பட்டனர். சமீபத்தில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட இளம் போராட்டக்காரர் சஹஜ மதுஷங்க 20 ஓகஸ்ட் 2022 அன்று பொலிஸாரினரால் கைது செய்யப்பட்டார். கொழும்பில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் மன்னாரைச் சேர்ந்த தமிழ் செயலார்வலர் வி.எஸ். சிவகரனுக்கு 15 ஓகஸ்ட் 2022 அன்று அழைப்பு விடுத்தனர். ஜனாதிபதி செயலகத்திற்குள் வலுக்கட்டாயமாகப் பிரவேசித்ததற்காக, பன்னிப்பிட்டியவில் வசிக்கும் 38 வயதுடைய ஒருவரை 1 ஓகஸ்ட் 2022 அன்று பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர். இலங்கையின் முன்னாள் நீச்சல் வீரரான ஜூலியன் பொலிங் மற்றும் தொழிலதிபர் ஜொனாதன் மார்டென்ஸ்டின் ஆகியோர் 17 ஓகஸ்ட் 2022 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டனர். முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச, தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட 13 பிரதிவாதிகளுக்கு எதிராக ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார்/செய்திருந்தது. இலங்கையில் இடம்பெற்று வரும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் பாரிஸில் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த பிரான்ஸில் வசிக்கும் அர்ஜூன் அமடோரு என்பவரை நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அலுவலர்கள் கைது செய்தனர். பிரிட்டிஷ் பிரஜையும் மற்றும் சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவருமான கெய்லீக் ஃப்ரேசரின் கடவுசீட்டு கைப்பற்றப்பட்டதுடன், பின்னர் அவரது விசா இரத்துச் செய்யப்பட்டு, நாட்டை விட்டு வெளியேறும்படி கேட்கப்பட்டது. மொனராகலையைச் சேர்ந்த சட்டத்தரணி இந்திக அத்தநாயக்க 31 ஓகஸ்ட் 2022 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு, அண்மையில் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறித்து அவரிடம் வினவப்பட்டது. பாடலாசிரியரும், தொழில்முறை வடிவமைப்பாளருமான சஞ்சய எபா செனவிரத்னவிடம் கறுவாத்தோட்டம் பொலிஸார் அண்மையில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டமை குறித்து கேள்வி எழுப்பினர். பொலிஸ் வன்முறையைக் கண்டித்து தொழிற்சங்கவாதிகளாலும் மற்றும் சில செயலார்வலர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திரிகையார் மகாநாடொன்று, போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு செயலார்வலரைக் கைது செய்ய முயன்ற பொலிஸாரினரால் இடையூறு செய்யப்பட்டது. தேசிய பிக்கு முன்னணியின் ஊடகச் செயலாளரான கொஸ்வத்தே மகாநாம தேரரைத் தேடி துறைமுகப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் குழுவொன்று கொழும்பில் உள்ள பௌத்த விகாரை ஒன்றை திடீர் முற்றுகைக்கு உட்படுத்தியது.*

***செப்ரெம்பர் 2022***

*முல்லைத்தீவில் அரசாங்கத்தின் ஆதரவுடன் பௌத்த விகாரை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட இரு மாகாண மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் பல 'உயர் பாதுகாப்பு வலயங்களைப்' பிரகடனப்படுத்திய ஒரு தினத்திற்குப் பின்னர், போராட்டம் "சட்டவிரோதம்" என்று அதிகாரவர்க்கத்தினர் வலியுறுத்தியதால், செப்ரெம்பர் 23 அன்று கொழும்பு நகரில் நடந்த போராட்டத்தில் மூன்று பிக்குகள் மற்றும் நான்கு பெண்கள் உட்பட 84 போராட்டக்காரர்களைப் பொலிஸார் கைது செய்தனர். பொலிசாரின் தாக்குதலால் குறைந்தது 7 போராட்டக்காரர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1987இல் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து இறந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் பிரிவுத் தலைவர் திலீபனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நடமாடும் நினைவுச் சின்னத்தை இலங்கை இராணுவம் தடுத்து நிறுத்தி அச்சுறுத்தியுள்ளது. அரச வங்கியொன்றின் குறைந்தபட்சம் எட்டு தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவர் உட்பட அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறித்து கேள்வி எழுப்புவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு பல போராட்டக்காரர்கள் அழைக்கப்பட்டனர். கடந்த மே 9 அன்று, அரச சார்பு கும்பல்களால் கொடூரமாகத் தாக்கப்பட்ட எதிர்ப்புப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த ஒஷாந்த பிரசாத் தாபரே, வாக்குமூலத்தைப் பெறுவதற்காக கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். முன்னாள் மாணவர் செயலார்வலரும், 'மாற்றத்திற்கான இளைஞர்கள்' அமைப்பின் தேசிய அமைப்பாளரும், அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தின் தலைவருமான லஹிரு வீரசேகர, செப்ரெம்பர் 9 அன்று, போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களின் நினைவாக மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்திவிட்டுத் திரும்பும் போது கைது செய்யப்பட்டார். 2022 ஜூலையில் அண்மைய போராட்டத்தின் போது, சட்ட விரோதமாக ஜனாதிபதி அலுவலகத்திற்குள் பிரவேசித்து, போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்த போது, கொழும்பு குற்றப் பிரிவினரால் நடிகை தமிதா அபேரத்ன கைது செய்யப்பட்டார். பாதுகாப்புச் செயலாளரின் கட்டளையின் கீழ், இலங்கை முன்னாள் படைவீரர் சங்கத்திற்குச் சொந்தமான கேட்போர் கூடம் அனுமதி மறுத்ததால், கூட்டத்தின் இடத்தை மாற்ற வேண்டிய கட்டாயம் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்புக்கு ஏற்பட்டது. பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனம் மற்றும் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்பு ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் பேரணி கொழும்பு ஹைட் பூங்காவில் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, மின்வெட்டு ஏற்பட்டுள்ளது. கொழும்பு கோட்டையில் நடைபெற்ற போராட்டத்தின் போது நிபுன் என்ற செயலார்வலரை சிவில் உடையில் இருந்த பொலிஸார் எவ்வித சட்ட ஆவணங்களும் வழங்காமல், கைது செய்ய முற்பட்டனர்.*

***ஒக்ரோபர் 2022***

*கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டியில் எதிர்க்கட்சியான சமகி ஜன பலவேகய [Samagi Jana Balawegaya (SJB)] ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தின் போது, 15 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்ட அதே வேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் அதே பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அனுசரணையில் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது. அரகலய போராட்டத்தில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் வகையில், காலி முகத்திடலில் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு பொலிஸார் இடையூறு செய்தனர். போராட்டம் நடைபெற்ற பகுதிக்குள் பிரவேசிப்பதற்கு முன்பு அலுவலர்களிடம் போராட்டக்காரர்கள் முன் அனுமதி பெறவில்லை என்று பொலிஸ் கூறியது. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் (IUSF) ஏற்பாடு செய்திருந்த போராட்டமொன்றின் போது, களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் உட்பட ஆகக்குறைந்தது 8 மாணவர் செயலார்வலர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சமீபத்திய போராட்ட இயக்கத்தில் ஈடுபட்ட இளைஞர் செயலார்வலர் பைசான் அகமது பொலிஸரால் கைது செய்யப்பட்டு, 4 மணித்தியாலய விசாரணைக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டார். கொழும்பில் உள்ள அரகலய செயலார்வலர்களின் வீடுகளுக்குச் சென்று*

*பொலிஸார் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்து வருவதாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.*

***நொவம்பர் 2022***

*பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு நொவம்பர் 14 அன்று கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திற்கு பேரணியாகச் சென்ற சமகி ஜன பலவேகயவின் பெண்கள் முன்னணியைச் சேர்ந்த சிலரை பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். மற்றொரு விடயத்தில், நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவர் செயலார்வலர்களை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஊர்வலமாகச் சென்ற இரு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.*

*கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்குமாறு கோரியும், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் நொவம்பர் 2 அன்று தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியன இணைந்து மாபெரும் போராட்டமொன்றை ஒழுங்குபடுத்திய போது, அதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று பொலிஸார் எச்சரிக்கைக் கடிதம் அளித்ததுடன், பொலிஸ் பலம், கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் பீரங்கி தாக்குதல்கள் ஆகியன பயன்படுத்தி போராட்டம் தடுக்கப்பட்டது. போராட்டத்திற்கு முன்னைய தினம், போராட்டத்தைக் கண்டிக்கும் வகையில் ஒரு செய்தியாளர் சந்திப்பை அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடத்தியதுடன், அதில் போராட்டக்காரர்களைத் துரோகிகள் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முத்திரை குத்தினார். போராட்டத்திற்கு பல நாட்களுக்கு முன்பு, தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எடுக்கப்படும் முயற்சிகள் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்பதால், போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டு வர்த்தகப் பேரவைகளின் குழுவும் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டது.*

*நொவம்பர் 18 அன்று, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தினால் (IUSF) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப்பதற்காக கொழும்பில் உள்ள நெலும் பொக்குன திரையரங்கிற்கு அருகில் பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டை ஏவியதுடன், நீரையும் பீச்சியடித்தனர். சர்வதேச அழுத்தத்தைக் கோரி, ஐ.நா. வளாகத்திற்குள் போராட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்கும் விதத்தில் பொலிஸார் நிறுத்தப்பட்டனர். நொவம்பர் 11 அன்று, கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பொலிஸார் கலைக்க முயன்றனர். அண்மைய அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களின் தலைவர்களில் ஒருவரான வண. பிதா ஜீவந்த பீரிஸைக் கைது செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக அரகலயவின் வழக்கறிஞரான சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளனர். கடந்த நொவம்பர் 16 அன்று, பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவிற்கு அருகில் இடம்பெற்ற போராட்டத்தின் போது, 'மெகாபோன்களை' பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளதால், அவற்றை பயன்படுத்த முடியாது எனப் போராட்டக்காரர்களிடம் ஓர் உயர் பொலிஸ் அலுவலர் தெரிவித்ததாகச் சார்த்துரைக்கப்படுகிறது. நொவம்பர் 27 அன்று, முல்லைத்தீவில் மாவீரர் தினத்தை முன்னிட்டு முன்னாள் தமிழ்க் கிளர்ச்சியாளர்களை நினைவுகூரும் நிகழ்வின் போது செய்யப்பட்டிருந்த அலங்காரங்களைப் பொலிஸார் அழித்துள்ளனர். நொவம்பர் 26 அன்று, மட்டக்களப்பு மாவட்டச் சிவில் சமூக மன்றங்களின் தலைவர் எஸ்.சிவயோகநாதனை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்த இனந்தெரியாத நபர் ஒருவர், முக்கியமாக "மாவீரர் தினம்" பற்றிய அவரது திட்டங்களைக் கேட்டறிந்தார்.*

***டிசம்பர் 2022***

*கொழும்பில் அண்மையில் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களின் போது வீழ்ந்த போராட்டக்காரர்களை நினைவுகூரும் நிகழ்வொன்றை #GoGotaGama அரசாங்க எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் ஏற்பாடு செய்திருந்த போது, பெருமளவிலான பொலிஸ் அலுவலர்கள்*

*காணப்பட்டனர். #GoGotaGama நூலகத்தால் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு விநியோகம் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நூல்கள் மற்றும் எழுதுபொருட்கள் சேகரிக்கும் இடத்திலும் பொலிஸார் இடையூறு செய்ய முயன்றனர். அரகலயவுடன் தீவிரமாக ஈடுபட்டிருந்த சமூக ஊடகச் செயற்பாட்டாளரான திலான் சேனநாயக்க, டிசம்பர் 14 அன்று, கொழும்பு புறநகர்ப் பகுதியில் உள்ள நுகேகொடையில் உள்ள அவரது அலுவலகத்தில் முகமூடி அணிந்த இருவரால் கத்தியால் குத்தப்பட்டார்.*

## *6. சட்ட மற்றும் கொள்கை மாற்றங்கள்*

***தேர்தலை ஒத்திவைத்தல்***

*ஜனவரி 2022இல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.*

***அவசர நிலை மற்றும் ஊரடங்கு***

*இலங்கையில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மத்தியில், 2022 ஏப்ரல் முதல் ஜூலை வரை அவசரகால நிலை மூன்று தடவைகள் பிரகடனப்படுத்தப்பட்டதுடன், வீதிகள் உட்பட பொது இடங்களில் ஒருவரும் இருக்கக்கூடாது என்று உத்தரவிட்டு, பல ஊரடங்குச்சட்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.*

*ஏப்ரல் 1 அன்று, மிரிஹானாவில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டம் தொடங்கியதால், இலங்கையில் அவசரகால நிலையை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியதுடன்,[17] அந்த உத்தரவு 5 ஏப்ரல் 2022 அன்று இரத்துச் செய்யப்பட்டது.[18] ஏப்ரல் 2 மாலை 6 மணி முதல் ஏப்ரல் 4 காலை 6 மணி வரை, "ஏதேனும் பொது வீதி, ரயில்வே, பொதுப் பூங்கா, பொது பொழுதுபோக்கு மைதானம் அல்லது பிற பொது மைதானம் அல்லது கடற்கரையோரங்கள் ஆகியவற்றில் யாரும் இருக்கக்கூடாது" என்று ஏப்ரல் 2 அன்று ஊரடங்கு உத்தரவை ஜனாதிபதி அறிவித்தார்.[19]*

*மே 6 அன்று, மீண்டும் அவசரகால நிலையை ஜனாதிபதி அறிவித்தார்.[20] அமைதியான போராட்டக்காரர்கள் மீது அரசுக்கு ஆதரவான கும்பல் தாக்குதல் நடத்தியதை அடுத்து, நாடு முழுவதும் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து, பல்-எண்ணிக்கையிலான ஊரடங்குச்சட்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. மே 9 அன்று இரவு 7 மணியிலிருந்து 12 மே 2022 அன்று காலை 7 மணி வரை ஊரடங்குச்சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.[21, 22] மே 12 அன்று பிற்பகல் 2 மணியிலிருந்து மே 13 அன்று காலை 6 மணி வரை மீண்டும் ஊரடங்குச்சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.[23] மே 13 அன்று பிற்பகல் 2 மணியிலிருந்து மே 14 அன்று காலை 6 மணி வரை மீண்டும் ஊரடங்குச்சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.[24] மே 14 அன்று மாலை 6 மணியிலிருந்து மே 15 அன்று காலை 5 மணி வரை மீண்டும் ஊரடங்குச்சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.[25] மே 16 அன்று இரவு 11 மணியிலிருந்து மே 17 அன்று காலை 5 மணி வரை மீண்டும் ஊரடங்குச்சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

*ஜூலை 17 அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தினார்.[26]*

***ஆயுதப் படைகளுக்கு அழைப்பு***

*பொது ஒழுங்கைப் பராமரிப்பதற்காக ஆயுதப் படைகளுக்கு அழைப்புவிடுக்கும் மாதாந்த வர்த்தமானிகள் ஜூலை மற்றும் செப்ரெம்பர் ஆகியன தவிர, ஆண்டு முழுவதும் வெளியிடப்பட்டன. பொது பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) 12ஆவது பிரிவின் கீழ், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது,*

---

[17] http://documents.gov.lk/files/egz/2022/4/2273-86_E.pdf
[18] http://documents.gov.lk/files/egz/2022/4/2274-10_E.pdf
[19] http://documents.gov.lk/files/egz/2022/4/2273-89_E.pdf
[20] http://documents.gov.lk/files/egz/2022/5/2278-22_E.pdf
[21] http://documents.gov.lk/files/egz/2022/5/2279-11_E.pdf
[22] http://documents.gov.lk/files/egz/2022/5/2279-13_E.pdf
[23] http://documents.gov.lk/files/egz/2022/5/2279-16_E.pdf
[24] http://documents.gov.lk/files/egz/2022/5/2279-19_E.pdf
[25] http://documents.gov.lk/files/egz/2022/5/2279-22_E.pdf
[26] http://documents.gov.lk/files/egz/2022/7/2288-30_E.pdf

*சிவில் விவகாரங்களில் தலையிட இராணுவத்திற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது. இதேபோன்ற வர்த்தமானிகள் தற்போது வரை பல வருடங்களாக வெளியிடப்பட்டு வருகின்றன.*

***தகவல் அறியும் உரிமை மீதான கட்டுப்பாடுகள்***

*2022 ஜனவரியில், ஊடகவியலாளர் ஒருவரின் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையின் அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துப் பிரகடனம் குறித்த தகவல்களை வெளியிட தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக, நாடாளுமன்றச் செயலகம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. தகவல் அறியும் உரிமையைக் கட்டுப்படுத்துகின்றதும் மற்றும் பத்திரிக்கையாளர்களின் தகவல் அணுகலைக் கட்டுப்படுத்துகின்றதுமான தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. செப்ரெம்பரில், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் இடம்பெற்ற விசாரணையின் போது, அண்மைக்காலமாக அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டமைக்காக கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ள அதே வேளை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை குறித்த தகவல்களை வழங்க இலங்கை பொலிஸ் மறுத்தது. பொலிஸ் மா அதிபர் சார்பில் ஆஜரான பொலிஸ் இன்ஸ்பெக்டரும் மற்றும் பொலிஸ் சட்டப் பிரிவின் சட்டத்தரணியுமான வசந்த குமார கொட்டியாகும்புர, தேசிய பாதுகாப்புக்கு பாரிய ஊறுவிளைவிப்பதாகக் கூறி தகவல்களை வழங்க மறுத்தார்.*

***பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள்***

*ஜனவரி 2022இல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் [Prevention of Terrorism Act (PTA)] சில திருத்தங்களை அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டது. இருப்பினும், மனித உரிமைக் குழுக்களின் கூற்றுப்படி, மாற்றங்கள் மிகச் சிறியதாகவும், போதுமானதாகவும் இல்லை என்பதுடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துடன் இருக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வும் காணப்படவில்லை. ஓகஸ்ட் 2022இல், சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு (PTA) பதிலாக, மேலும் "தளர்வான" ஏற்பாடுகளுடன் புதிய 'தேசிய பாதுகாப்புச் சட்டத்தை' அறிமுகப்படுத்துவதாக இலங்கையின் நீதி அமைச்சர் அறிவித்தார்.*

***பயங்கரவாதத்திற்கும் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதற்குமான தடைவிதிப்புப் பட்டியல்***

*ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட Global Tamil Forum (GTF) உட்பட ஆறு சர்வதேச தமிழ் புலம்பெயர் அமைப்புகளையும், பயங்கரவாதத்திலும் மற்றும் பயங்கரவாத நிதிப்படுத்தலிலும் ஈடுபட்டதாகக் கூறப்படும் தனிப்பட்டவர்களின் தடைவிதிப்புப் பட்டியலில் இருந்த 316 நபர்களையும் இலங்கை நீக்கிய அதே வேளை, 2012இன் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ், கவிஞர் அஹ்னாஃப் ஜசீம் புதிதாகப் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.*

***கொழும்பு நகரில் போராட்டங்களைத் தடுப்பதற்கு உயர் பாதுகாப்பு வலயங்களின் பிரகடனம்***

*உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தின் கீழ், பல முக்கிய அரசாங்கக் கட்டிடங்கள் உட்பட கொழும்பில் புதிய உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் செப்ரெம்பர் 23 அன்று வெளியிடப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்துவதற்கு உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என பத்திரிகை அறிக்கை ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) வெளியிட்டுள்ளது. ஒரு 'ட்வீட்' வெளியிட்டு, ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ட் வூலும் கரிசனைகளை எழுப்பினார்.*

***மறுவாழ்வு பணியகச் சட்டம்***

*செப்ரெம்பரில், "புனர்வாழ்வு பணியகச் சட்டம்" என்ற தலைப்பில் ஒரு சர்ச்சைக்குரிய வரைவு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இந்தச் சட்டமூலம் சமீபத்திய போராட்டங்களில் கலந்து கொண்டவர்களைக் குறிவைத்து, நீதித்துறை நடைமுறைகளைப் பின்பற்றாமல், கட்டாய மறுவாழ்வு செயல்முறையின் ஊடாக அவர்களை அனுப்பும் முயற்சி என்று மனித உரிமை செயலார்வலர்களும் மற்றும் ஏனையோரும் கூறினர்.*

***அத்தியாவசியச் சேவைகள்***

*ஜூலை தொடக்கத்தில், பல சேவைகளை அத்தியாவசியச் சேவைகளாக அறிவித்து ஒரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இத்தகைய பிரகடனங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நன்கு அறியப்பட்ட தந்திரோபாயமாகும். வர்த்தகத் தலைநகரான கொழும்பில் சில நாட்களாக ஊரடங்குச்சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மின்சார விநியோகம், எரிபொருள் விநியோகம் மற்றும் பங்கீடு மற்றும் சுகாதார சேவைகள் ஆகியனவற்றை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியினால் ஒக்ரோபர் 3 அன்று வெளியிடப்பட்டது. பல கோரிக்கைகளை முன்வைத்து, டிசம்பர் 12 அன்று பிற்பகல் 4 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை நாடு தழுவிய அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஆரம்பித்த நிலையில், சகல தபால் ஊழியர்களின் விடுமுறையும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் அறிவித்தது. மின்சார விநியோகம், பெற்றோலியம் உற்பத்திப்பொருட்களினதும் மற்றும் எரிபொருளினதும் விநியோகம் அல்லது பங்கீடு மற்றும் சுகாதார சேவைகள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட சகல சேவைகளையும் அத்தியாவசியச் சேவைகளாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை டிசம்பர் 3 அன்று ஜனாதிபதி வெளியிட்டார். அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்வது என்பது தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு வரலாற்றுரீதியாகப் பயன்படுத்தப்படும் ஒரு தந்திரோபாயமாகும்.*

## *7. சிவில் சமூகத்தின் அடக்குமுறை*

***போராட்டங்களுக்கும் மற்றும் தொழிற்சங்கங்களுக்கும் எதிரான அறிக்கைகள்***

*ஜனவரியில், சில தொழிலாளர் வேலைநிறுத்தங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும், அதற்காக அரசியலமைப்பு திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் நீதி அமைச்சர் கூறினார். பெப்ரவரி 2022இல், மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சருமான பிரமித பண்டார தென்னகோன், இலங்கையில் தொழிற்சங்கங்களும் ஏனைய எதிர்க்கும் அரசியல் கட்சிகளும் ஒருவித தொற்றுநோய்களாக இருப்பதாகக் கூறினார். அதே மாதத்தில், தொழிற்சங்கச் செயலார்வலர்கள் மீது மக்கள் தாக்குதல் நடத்த வேண்டும் என்ற சர்ச்சைக்குரிய கருத்தைப் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சியும் வெளியிட்டார். மார்ச்சில், ஜனாதிபதி செயலணியின் தலைவர் பதவியை வகித்து வரும் சர்ச்சைக்குரிய பிக்கு ஞானசார, பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பேசுகையில், ஜனாதிபதி ஹிட்லரைப் போன்று செயற்பட வேண்டும் எனவும், போராட்டங்களையும் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் தடை செய்ய வேண்டும் எனவும் முன்மொழிந்தார்.*

***மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு எதிரான பழிவாங்கல்கள்***

*நொவம்பர் 24 அன்று, பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மனித உரிமைப் பாதுகாவலர்களைக் கிண்டல் செய்ததுடன், பொலிஸ் அலுவலர்களினதும் மற்றும் ஏனைய அரசாங்கப் பாதுகாப்பு அலுவலர்களினதும் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உரிமை இல்லை எனவும் வாதிட்டார். 27 ஜனவரி 2022 அன்று, மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய பாராளுமன்றத்தின் துணைக்குழுவில் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரும் மற்றும் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் தற்போதைய தலைவருமான அம்பிகா சற்குணநாதன் அளித்த சாட்சியம் தவறாக வழிநடத்துகிறது என்று பெப்ரவரி 2022இல், இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்டது.*

*பெப்ரவரி 2022இல், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் நீதிக்காக குரல் எழுப்பிய ஷெஹான் மாலக கமகே, பொலிஸின் CIDஇனரால் கைது செய்யப்பட்டார். மன்னாரில் வசிக்கும் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் கொழும்பில் உள்ள TID தலைமை அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு, 5 மணித்தியாலயங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். செயலார்வலரான மனோரமா வீரசிங்கவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் எதற்காக அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடவில்லை. கைதிகளின் உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் [Committee to Protect Rights of Prisoners (CPRP)] செயலாளர் சுதேஷ் நந்திமாலின் தனிப்பட்ட விவரங்களை அடையாளம் தெரியாத நபர்கள் தேடினர். TIDஇலிருந்து பொலிஸ் அலுவலர்கள் பல அரசு சாரா அமைப்புகளுக்குச் சென்று, பணியாளர்களினதும் மற்றும் நிதியுதவி அளிப்பவர்களினதும் விவரங்களை வழங்குமாறு கோரியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டச் சிவில் சமூக மன்றத்தின் தலைவர் சபாரத்தினம் சிவயோகநாதன் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் ஆகிய இரு மாதங்களில் பொலிஸாரால் அழைக்கப்பட்டிருந்தார். டிசம்பரில், 9 ஜூலை 2022 அன்று நடந்த போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறை மற்றும் நொவம்பர் 28 அன்று மீனவர்கள் நடத்திய போராட்டத்தின் போது ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலை ஆகியனவற்றுடன் தனது சமூக ஊடகங்களில் வெளியிட தகவல்சேகரிக்கச்சென்ற தம்மைப் பொய்யாகக் குற்றஞ்சாட்டுவதற்காக விசாரணைகளை மேற்கொள்வதாகக் கூறி தம்மை பொலிஸார் கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடுமாறு கோரி, அடிப்படை உரிமைகள் [Fundamental Rights (FR)] மனு ஒன்றை சிவில் சமூக செயற்பாட்டாளர் ஷிராந்த அமரசிங்க தாக்கல் செய்தார். செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், போராட்டத்தைப் பதிவு செய்யும் போது அரசாங்கச் சார்புக் கும்பலால் தனது தொலைபேசி பறிக்கப்பட்டதாகவும், அதே நேரத்தில் ஒரு பொலிஸ் அலுவலர் தன்னைக் கைது செய்யப்போவதாக மிரட்டியதாகவும் கூறினார்.*

## *8. ஏனைய சம்பவங்கள்*

***அரச அலுவலர்களுக்கும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் எதிரான பழிவாங்கல்கள்***

*2022 பெப்ரவரியில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள ஒரு சக்திவாய்ந்த அரசியல்வாதி தன்னைப் பதவியில் இருந்து நீக்க முயற்சிப்பதாக காணி ஆணையாளர் கீர்த்தி கமகே தெரிவித்தார். அதே மாதத்தில், ஊடகப் பேட்டிகளிலும் மற்றும் பத்திரிகை விளக்கமளிப்புக்களிலும் அரசாங்கத்தை விமர்சித்ததற்காக, அரசாங்கத்திற்குச் சொந்தமான லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினதும் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினதும் (PUCSL) தலைவர்களுக்கு எதிராகப் பிரதமரும் மற்றும் ஆளும் அரசாங்க அமைச்சர்களும் நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏப்ரலில், போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் விதத்தில் வாகனப் பதிவு இலக்கங்களற்ற மோட்டார் சைக்கிள்களில் முகமூடி அணிந்த ஆயுதம் ஏந்திய இராணுவ வீரர்களை இடைமறித்து விசாரித்த பொலிஸ் அலுவலர்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபரிடம் இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்தார். செப்ரெம்பரில், அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட போஷாக்கு குறைநிரப்பியான 'திரிபோஷா'வில் அதிக அளவு அஃப்லாடாக்சின் கண்டறியப்பட்டதை வெளிப்படுத்திய இலங்கைப் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் [Public Health Inspectors' Union of Sri Lanka (PHIUSL)] தலைவர் எம்.ஜி. உபுல் ரோஹானவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் அச்சுறுத்தினார். ஒக்ரோபரில், தமிழ் இனச் சிறுபான்மையினரைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கமும் தனித்தனி வாகனங்களில் கூட்டத்திற்குச் சென்ற போது, அவர்களை புலனாய்வுப் பிரிவினர் பின்தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.*

***ஏனைய சம்பவங்கள்***

*பெப்ரவரியில், அரச புலனாய்வுப் பிரிவினர் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு குழுவினர், அரசியல் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (ITAK) இளைஞர் அணியின் உதவிச் செயலாளர் நிஷாந்தனை வெள்ளை 'வேன்' மூலம் கடத்த முயன்றனர். 28 ஜூன் 2022 அன்று, பேருவளையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் செயலார்வலர் மின்ஷாத் முபாரக் இருந்தபோது, பொலிஸாரால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டார். செப்ரெம்பரில், மட்டக்களப்பை தளமாகக் கொண்ட மனித உரிமைச் செயலார்வலர் லக்ஷ்மணரஜனி ஜெயப்பிரகாஷ் மற்றும் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கந்தையா கலைவாணி ஆகியோர் கொழும்பில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டனர்.*